உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்தொன்றுந்தொகுதி.

VOL-XXI.

மதுரைத்தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1922-23.

உ

செந்தமிழ்

இருபத்தொன்றுந்தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.		எழுதியவர்.	பக்கம்.
அரிசில்கிழார்:—		பெயர்விழையான்	௮௪
அருவியன்காதை:—		ஸ்ரீமத். K. N. சிவராஜபிள்ளை B.A.	௮௯, ௧௩௧, ௧௬௭, ௨௧௭, ௨௯௩.
அறியவேண்டிய சிலபழங்கதைகள்.—		ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்.	௫௭௧
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—			௩௮௯
இரண்டாம்ராஜாதிராஜன்:—		ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்	௪௧௩
இறைவனெண்குணம்	,,	சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.	௯௭
உடம்படுமெய்.—	,,	சி. கணேசையர்.	௮௧
ஒரு விக்ஞாபனம்:—	,,	ரெ. ராமையங்கார்	௪௩
ஒரு வேண்டுகோள்:—	,,	K. C. வீரராகவையர்.	௪௧
ஒலோகமாதேவீச்சுர சிலாசாசனம்	,,	L. உலகநாதபிள்ளை.	௪௨௫
கம்பராமாயண இன்கவித்திரட்டு:—	,,	V. P. சுப்பிரமணியமுதலியார்	௨௫, ௪௯, ௧௬௯, ௨௨௧, ௨௬௯, ௩௧௭, ௩௬௫, ௪௦௫, ௪௬௧, ௫௦௯, ௫௭௩.
களப்ரரும் சங்ககாலமும்.—	,,	மு. தம்பையா	௨௫௬
களப்ரரும் சங்ககாலமும்.—	,,	கே. ஜி. சங்கரையர்.	௪௮௫
…ஞ்சரம்.—	,,	கே. ஜி. சேஷையர்.	௫௫௭

குடம்பையென்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம்:—	ஸ்ரீமத். பெ. ச. இரத்தினவேல் முதலியார்	௩
குறுந்தொகை.—	,, ஸி. எஸ். செலுவையர்.	௩
சாதுகைமாந்தர்:—	,, S. வையாபுரிப்பிள்ளை, B.A.,B.L.	௪
சாதுகைமாந்தர்.—	,, கே. ஜி. சேஷையர்.	௪
சிலப்பதிகாரவாராய்ச்சி.—	,, டி. என். அப்பனையங்கார்	௫
சூரியசந்திரோற்பத்தி.—	,, பிரபோதசைதந்யர்	௨
செந்தமிழ்த்தீஞ்சுவை –	,, சி. கணேசையர்	ககஙு, ௨
சோழன்மணக்கிள்ளி.—	,, சோமசுந்தரதேசிகர்	௩௳
டால்டன் கல்விமுறை.—	,, சோமசுந்தரதேசிகர்	
தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—		௩
திருமங்கையாழ்வாரின்காலமளது.—	ஸ்ரீமத் கே. நீலமேகம்.	௫
தொல்காப்பியதேவரின்காலக்குறிப்பு		௪
தொல்காப்பியவாராய்ச்சி.—	ஸ்ரீமத் கே. எஸ். நவநீதகிருஷ்ணபாரதி	௪
நற்றுணைநாற்பது.—	,, ,,	௫
நாலாயிரப்பிரபந்தங்களின் சாற்றுப்பாக்கள்—	,, கிடாம்பி அனந்தன்	௩௩
நாலாயிரப்பிரபந்தச் சாற்றுப்பாக்களின் ஆராய்ச்சி.	,, ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளை.	௪௨௧
நால்வகைப்பொருள்	,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்	௨௬
பலகவித்திரட்டு :—	,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்	க௬
	௩௫௭, ௩௯௭, ௪௪௫, ௫௪௯.	
பல்லவ உற்பத்தி:—	,, C. ராசநாயகமுதலியார்	௨0
பல்லவர்கோயில்கள் :—	,, தி. நா. சுப்பிரமணியம்.	௫௩
பாடாந்தரமும் பொருள் கோடலும்:—	,, சி. கணேசையர்	௩௪
பாமணி சிலாலிகிதம்:—	,, K. G. சங்கரையர்	

புதியகல்விமுறை(மாண்டி ஸோ) } ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர் கஙௗ௭ ககூ௩, ௨௮௫.

புத்தகமதிப்புரை.—௪௭, க௪௩, ௨௫௨, ௨கூ௭, ௩௪௭, ௪௪௩, ௫00, ௫௮கூ.

புரூரவசரிதை :—உதவிப்பத்திராதிபர். ௩௩, ௪௭௭, ௫௩௫.

புறநானூறு: —(இரண்டாம்பதிப்பு) பத்திராதிபர்.— ௨௫௩

பெருந்தொகை :— (முன்னுரை) } ஸ்ரீமத். மு. இராகவையங்கார். ௫௩௩

பெருமிழலைக்குறும்ப நாயனர் திருப்பதி. } ,, டி. வி. சதாசிவப்பண்டாரத்தார். ௪௮௭

பொருணூற்சிறப்பு:— ,, பண்டித-மயில்வாகனனர். க௨௩, ௫௬0

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௩00

மலைகடலுற்பத்தி:— ஸ்ரீமத் பிரபோதசைதந்யர். ௩௪கூ

மலையாளம்.— ,, வித்யாபூஷணவேங்கடராமசர்மா ௪கூ௫

முதற்கண்டராதித்த சோழதேவர். } ,, டி. வி. சதாசிவப்பண்டாரத்தார் ௩௮௫

மேற்றிசைச்செல்வம்.— ,, பிரபோதசைதந்யர். க௮௫

யவனபுரத்துக்கலைச் செல்வம் :— } ,, பிரபோதசைதந்யர். ௫0க

வஞ்சிமாநகர்.— ,, ஸி. எஸ். செலுவையர் க௪௫

வடமொழியும்தமிழும் (ஓரெதிருரை) } ,, எஸ். வையாபுரிப்பிள்ளை கக

விஞ்ஞானதீபம்.— ,, பண்டித-மயில்வாகனனர் க, ௬க

ஸம்ஸ்க்ருதவ்ருத்த மஞ்ஜரீ:— } ,, R. S. நாராயணஸ்வாமி ஐயர். கூ௫, ககக, ௩௪௩, ௪கூ0, ௫௩க

இத்தொகுதியில் வெளிவந்தநூல்கள்.

(முற்றுப்பெருதவை.)

1. கூடற்புராணம்:—உதவிப்பத்திராதிபர் (பகுதி) க, ௨, ௩, ௪.
2. பெருந்தொகை:—ஸ்ரீமத். மு. இராகவையங்கார் (பகுதி) க௨

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவு கணக்கு (பகுதி) ௬, ௭, ௮, கூ.

ஸ்ரீ:

பெருந்தொகை.

முதலாவது

கடவுள் வாழ்த்தியல்.

முதற்கடவுள்.

1. பூமலை நீருறையுள் புள்ளேறு புட்கொடி
வாய்மைவே லாழி படைக்கலம்—நாமம்
பிரம னிறைகண்ணன் பொன்றீக்கார் மேனி
கருமம் படைப்பழிப்புக் காப்பு.

கந்தழி

2. சார்பினுற் றோன்ருது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

(பெருந்தேவபாணி வகை)

3. மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும்
இருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்க ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயாய்
அளப்பரிய நான்மறையா லுணர்த்துதற் கரியோனே.!

(எட்டடித்தரவு)

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
அவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினல்
வெவ்வினைசெய் தவையுழந்து வெம்பிறவிக் கடலழுந்த
அவ்வினையை யகற்றும னிற்பதுநின் னருளன்றே;

(1) யாப். வி. 94. (2) தொல். பொரு. 88. நச். உரை; திருமுரு. நச். உரை. (3) தொல். பொரு. செய். 146; பேரா...உரை; நச்...உரை.

பல்லுயிரும் படைப்பதுநின் [1]பண்பன்றே பகலினால்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து [2]நடுக்கஞ்செய் பகைநீக்கி
அல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே;

அழிப்பதுநின் றொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லாம்
ஒழித்தவற்றுள் ளுணர்வுகளை யொருவாம லுடனிறுத்திப்
பழிப்பின்றிப் பலகாலு மிப்பரிசே பயிற்றுதலின்
அழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே.

(தரவின்பாகம்பற்றிய நான்கடித்தாழிசை)

வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யும்
முனைவர் தமக்கு முத்தி யாயினை; (ஈரடியிரண்டு)

இலனென [3]விகழ்ந்தோர்க் கில்லையு மாயினை;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;
யருவுரு வென்போர்க் கவையு மாயினை;
பொருவற [4]விளங்கிய போத மாயினை; (ஓரடி நான்கு)

பானிற வண்ணனீ; பனிமதிக் கடவுணீ;
நீனிற வுருவுநீ; நிறமிகு கனலிநீ;
அறுமுக வொருவனீ; ஆனிழற் கடவுணீ;
பெறுதிரு வுருவுநீ; பெட்பன பிறவுநீ; (இருசீரெட்டு)

மண்ணுநீ; விண்ணுநீ; மலையுநீ; கடலுநீ;
எண்ணுநீ; எழுத்துநீ; இரவுநீ; பகலுநீ;
பண்ணுநீ; பாவுநீ; பாட்டுநீ; தொடருநீ;
அண்ணனீ; அமலனீ; அருளுநீ; பொருளுநீ; (ஒருசீர் பதினாறு)
ஆங்க—(தனிச்சொல்)

இணையை யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி

---

[1] பண்பென்றே. [2] நடுக்கஞ்செய்பவை நீக்கி. [3] விகந்தோர்க், விதந்தோர்க். [4] விளங்கிப்.

கடவுள்வாழ்த்தியல்.

முற்றிய பற்ருெடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தநின் மலரடி
அரிய [1]வென்ஞு யுரிதினிற் பெறவே.

4. நல்லார் வணங்கப் படுவான்பிறப் பாதி நான்கும்
இல்லா னுயிர்கட் கிடர்தீர்த்துயி ரின்ப மெய்துஞ்
சொல்லான் தருமச் சுடரோனெனுந் தொன்மையினுன்
எல்லா முணர்ந்தா னவனேயிறை யாக வேத்தி.

5. புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திலங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி யைம்பூத மகத்தடக்கி
மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கால்
அண்ணலேற் றெழிலூர்தி யருமறை முதல்வனுந்
தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்ருய் வானவில் லனையரே.

திருமால்.

6. என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானுவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

7. வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாருய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழிந்த—மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை.

8. விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ காஞச்
சுரநதிபா யுச்சி தொடுத்த—அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவா
யாம்பொலிவிற் ருயினதா லன்று.

9. வானுகி மண்ணுப் மறிகடலாய் மாருதமாய்த்
தேனுகிப் பாலாந் திருமாலே—ஆனுயா

---

[1]வன்ரு. (4) யாப். வி. 94 (நீலகேசி). (5) தொல். செய். 149 நச். (6) மியூசி. காட். II. 2. (7) தண்டி. 105 உதா. (8) ஷ. 35 உதா. (9) ஷ. 122 உதா.

வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

10. வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

(வினைநிரனிறை.)

11. இறுத்தொசித் தட்டுதைத் தேந்திப்போழ்ந் தாடிப்
பறித்தெறிந் தூர்ந்தணைந்து காத்தான்—செறுத்த
விடைகுருந்த மல்ல னுருள்மலைமா கூத்துப்
படைவிளவு புட்பாம் பினம்.

12. உண்டேர்ந் துதைத்தழித் தூதிக்காத் தேற்றளந்து
கொண்டெடுத்து வாய்போழ்ந்து சென்றுக்கிக்—கண்டறுத்தான்
பேய்முலை புட்சகடஞ் சோகோடான் நீர்நிலம்
பூமலைமா தூதமிர்த நஞ்சு.

13. பேய்முலை யயன்ஞாலம் பூங்குருந்த மதவேழம்
வாய்மருப் பெழிலேறு வாட்கண்ணார் குரவைச்சீர்
உண்டானு மளந்தானு மொசித்தானுங் காத்தானுங்
கொண்டானுங் கொடுத்தானுங் கொடியுவணத் தானரோ.

(தேவபாணிவகை.)

14. உறைபதியி னுடனயனை யுந்தியாற் படைத்தோயும்
அறைகடல்சூழ் நிலமுதலா வனைத்துலகும் புரப்போயும்
திருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயும்
ஒருநிறமே நிறமாக [1]வொள்ளெரியை யுயிர்த்தோயும்
[2]மறுவித்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயும்
நிறத்தோடு நெஞ்சொத்த நிலமடந்தை கணவனுநீ; (இது தாவு).

பின்னமா யொன்றாகும் பெருமாயை யியற்றுவாய்
இன்னமா யந்தெளிய வெமக்கருளி யிமையவர்க்கும்
அன்னமாய் முன்னொருகா லறம்பயந்த [3]வறனுநீ;

(10) முல்லைப்பாட்டு இறுதி. (11–13) யாப். வி 94. (14) தொல். செய். 146 நச், பேரா. [1] வெள்ளொளியை. [2] மறுவகத்த. [3] வறிவனீ.

குறியாதும் பிழையாத [1]குலமறையை முதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த [2]வறிவனீ;

மாணாத[3] மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோணாக மதிவாங்கிக் கொடுத்தருளி யடியவர்க்குக்
காணாத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ; (மூன்றுந் தாழிசை.)

வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ யமுதுநீ திருவுநீ யருவுநீ
அன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
இன்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மைநீ; (ஒருசீர்ச் சின்னம்.)

எனவாங்கு; (தனிச்சொல்.)

நால்வகை யுருவிற் பால்வே றாகிய
கால[4] முதல்வநிற் பரவுது ஞாலத்து
[5]நல்லவை யல்லவை யெல்லா நினைஅது
செல்வ நோக்கி னெய்திய வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே (சுரிதகம்).

விளக்கத்தனார்பாட்டு.

(அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.)

15. கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் [6]வாலுளை
[7]யழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்! (தரவு)

முரசதிர் வியன் மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறுப்புண் [8]டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

---

[1] குறிமறைய. [2] அறவனீ. [3] மாணாக. [4] கோல. [5] நல்லவை நல்லவை; நல்லவை யாவை யெனு அது நினைது—செல்வ நோக்கியனெய்தினி வல்லிதிற். (15) யாப். வி. 83; யாப். கா. செய். 2 உரை; தொல். செய். 147 பேரா; நச். [6] வாலுளைய. [7] யழலவிர். [8] டயர்ந்தவர் நிலஞ் சேராப்.

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர [1]வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் [2]செகுத்ததுநின் சினமாமோ;

படுமணி [3]யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய [4]வீழ்ந்துதிறம் வேருக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;
(இவை மூன்றுந் தாழிசை)

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை; (பேரெண்)

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை; (அளவெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ; நிழறிகழும் படையோய் நீ (இடையெண்)

ஊழி நீ; உலகு நீ; உருவு நீ; அருவு நீ;
ஆழி நீ; அருளு நீ; அறமு நீ; மறமு நீ; (சிற்றெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலைபுடைக் கொடுவரிப்
புயலுறழ் [5]தடக்கைப் போர்வே லச்சுதன்
றொன்றுமுதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே. (சுரிதகம்)

(கலிப்பாவகை.)

16. அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணிபிரும் பனிமுந்நீர்த் [6]தோட்டவிழ்ந்து மலர்ந்தனையே
[7]ஆர்கலி யுயரக லெழில்வானத் தமரர்கண முடனுர்ப்ப

---

[1] வெதிர் கலக்கி. [2] சேர்த்தது நின். [3] யினநிரை. [4] வீழ்ந்துதிறல், வீழ்ந்துநிறம். [5] தடக்கைச்செவ்வே. (16) யாப். வி. 94. [6] தொட்டுழந்து, தொட்டுத்துயிலமர்ந்தனையே. [7] வார்புகல் கழன்மறவர்.

வார்புன லிகன்மிகல மறமல்லனே மாய்க்கலிற் பொங்கினே
முள்ளெயிற் றரிமருள்க ளுய்த்தியரொடு நிரைநடுங்க
வரைதிர ணிமிர்தடக் கையினனி மலைஎடுத் தேந்தினே
காமரு தகைய கல்லியன் மார்பினே
கண்பொரு சுடரொளி நேமியை
பூமலி வினைபுனே தாரினே
பொன்புனே வினைபுனே யுடுக்கையை
அனேயன
பலவுடன் புகழ்தகப் பயந்தோய்நின்
இணைபுணர் கழலடி பரவுதும்
துணைபுண ருவகையொடு மன்னுது மெனவே.

(ஆசிரிய மண்டில விருத்தம்).

17 நிலங்கா ரணமாக நீர்க்கங்கை யேற்றான்
நீண்டதா ளாலங்கோர் நீர்க்கங்கை யேற்றான்
சலங்கா ரணமாகச் சங்குவாய் வைத்தான்
தாயலா ளவியநஞ் சங்குவாய் வைத்தான்
துலங்காச்சீர்த் தானவரைத் துன்னத்தா னட்டான்
[1]துன்னுவார்க் கின்னமிர்தந் துன்னத்தா னட்டான்
இலங்கா புரத்தார்தங் கோமானே யெய்தான்
[2]எத்தாதார் நெஞ்சத்து ளெஞ்ஞான்று மெய்தான்.

(தேவபாணி).

18. மலர்மிசைத் திருவினே வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினே மதித்திட வடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவன்
இனநிரைத் தொகைகளே யிசைத்தவி னழைத்தவன்
முலையுணத் தருமவ ணலத்தினே முடித்தவன்
முடிகள்பத் துடையவ னுரத்தினே யறுத்தவன்
உலகனேத் தையுமொரு பதத்தினி லொடுக்கினன்
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே.

அரியைப்பாடவேண்டுமென்னக் கூத்தர் பாடியது.

19. ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்துன்
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்

(17)யாப்.வி. 77 உரை. [1]துன்னலார்க். [2]எய்தாதார். (18) சிலப். 6-35உரை.
(19) தமிழ்நா. 136.

வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

கம்பர்பாட்டு.

20. நாராய ணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணா கரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

திருமால் திருநாமப்பெருமை.

21. வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சசிசொல்லுமே
தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே திசையாமலே
நான்சொல்லவு மெளிவந்தவா நாராயணா நாராயணா.

பாரதம்பாடிய பெருந்தேவனார்பாட்டு.

22. தேனோங்கு நீழற் றிருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றுந்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

திருவரங்கத்துத் திருமால்.

23. நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு
வண்டுறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை
யுண்டுறங்கு வானொருவ னுண்டு.

திருவரங்கத்துச் சத்தாவரணம்.

24. மாடமாளிகை சூழ்திரு வீதியு மன்னர் சேர்திரு விக்ரமன் வீதியும்
ஆடன் மார னகளங்கன் வீதியு மாலி நாட னமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியுங் குலவிராச மகேந்திரன் வீதியும்
தேடு த ரும வருமாவின் வீதியுந் தென்னரங்கர் திருவா வரணமே.

திருவேங்கடத்துத் திருமால்.

25. கூனின்று போனவன் றூனிமிர்ந் தோடக் குருடன்கொம்பிற்
றேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத்
தானின்ற வூமை தனக்கென்று கேட்கத் தருவர்வரம்
வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே.

---

(20) சில இராமாயணவேடுகளிற்கண்ட பாயிரச்செய்யுள். (22)பாரத வெண்பா: செந்தமிழ் 3, 400. (23)நன்னூல், 338 மயிலைநாதருரை. (24)கோயிலொழுகு, தலைப்பு.

திருமுட்டத்துத் திருமால்.

26. முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

திருக்கண்ணமங்கைத் திருமால்.

27. நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கழுநீரோ கண்ணமங்கை
மாயா வுனதுவடி வம்.

சவரிப்பெருமாள்.

28. முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே—யன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணாமற் று.

கச்சித் திருமால்.

29. ஆடவர்க ளெவ்வா றகல்வாரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றே
மன்றார் [1]கவிக்கச்சி மாண்பு.

அத்திகிரி.

30. அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணிற மேவுவது மத்தி கிரியே
வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தான வரையே
தன்றொழின் முருக்குவது தானில கெயிற்றரிய தான வரையே.

திருமோகூர்த் திருமால்.

31. பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக் காவைப்
பொருகிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற

(27, 28) தொண்டைமண். சத. மேற்கோள். (29) யாப். வி. 94; இது திருமழிசையாழ்வார்க்கு அடியாராகிய கணிகண்ணர்வாக்காகும். [1] மலிகச்சி, மதிற்கச்சி, பொழிற்கச்சி. (30) வீரசோ. யாப். 16 உரை. (31) காளமேகப்புலவர் பாடியது என்பர்.

நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க் காத
னப்பினைக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்னுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே.

ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கோபுரம்.

32. இருக்கோது மந்தணர் சூழ்புது வாபுரி யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங் கோயின் மணிவண்ணனுர்
திருக்கோ புரத்துக் கிணையம்பொன் மேருச் சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுவ மானப் பணிப்பில்லையே.

குறுங்குடித் திருமாலைக் கூத்தர்பாடியது.

33. திக்குளெட் டுக்கயந் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே.

ஷை புகழேந்திபாடியது.

34. எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணித் தற்பநித் [1]தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

திருமால்பதி.

35. ஆழ முடைமையினு லாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்தரமாம்—ஏழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றுயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியன் மாயோன் பதி.

சிவபிரான்.

36. மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னுதிரையா னென்றென் [2]றயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

---

(32) ஸ்ரீவில்லிபுத்தூர்க் கீழைக்கோபுரத்துக்கண்டசாஸனப்பாட்டு. [1]மெத்தை யுத். (35) வீரசோ. அலங். 19 உரை. (36) முத்தொள்ளாயிரக்காப்பு. [2]அயர்வுறுமீ.

37. நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா [1]னொருவனிய மானனுமாய்
எண்ணிறந்த வெப்பொருளு மாம்.

38. கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்றாழ் சடையர்—பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டானிருந்த
பாகத்த ரென்றே பரசு.

39. தலையினமர் கங்கைத் துகிலுடையான் றன்கைச்
சிலையினமர் செங்கண்மால் பாகன்—நிலையினமர்
தானவரைக் கொன்று விழக்கெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து.

40. மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னொலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றின்
ஆல மமிர்தான வாறு.

41. கொடியார் கொடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாய்க்—கடியார்
உரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.

42. கரவோடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவோடு நிற்பித்த தெம்மை—யரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.

(தரவுகோச்சகம்)

43. நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமுலையோ குறிசெய்ய
வேறணிந்த [2]சுடரெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
ஏறணிந்த வெல்கொடியோ யெவ்வுயிர்நிற் றவிர்ந்தனவே.

---

(37) தண்டி. 74 உரை; வீரசோ. அலங். 29 உரை: [1]னொருவனுயிர்க்குயிராய். (38) வீரசோ. அலங். 10 உரை. (39) ஷை. 19 உரை. (40) தண்டி. 63 உரை. (41) ஷை. 93 உரை. (42) வீரசோ. அலங். 26 உரை; தண்டி. 61 உரை; (43) தொல். செய். 149; பேரா; நச். உரை. [2]குவடெறிப்ப.

(தாவிஷக்கோச்சகம்)

44. பூணாக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலாள் பாகங்கொண்
[1]டூணாரும் பிச்சையா னுண்ணாத நஞ்சுண்டான்
வாணாறு தோய்ந்த [2]சடையான் மழுவலத்தான்
[3]யானூர்வஞ் செய்யு மிறை;

எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் [4]பயந்த
புனைபூங் [5]கழற்கான்மேற் பூவொடுநீர் தூஉய்
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
எனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு.

(கோச்சக வகை.)

45. கடாமுங் குருதியுங் கால்வீழ்த்த பச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரமன்
இடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தான்
மெய்யுறு நோயில்லை வேறோர் பிறப்பில்லை
ஐயுறு நெஞ்சில்லை [6]யாகாத தொன்றில்லை.

(பெருந்தேவபாணி வகை)

46. பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைதாழ் பூங்கச்சை விரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்
தண்கமழ்பூந் தாரிதழி தலைமலிந்து பிறைதயங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் றோலாதே
விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் டுணர்வழியாக்
கலிகெழு சடற்கச்சிக் கமழிளந் தேமாவின்
ஒலிதளிரு [7]மூலைச்சுவடு முடன்சிறப்ப வுலவுங்கால்; (எட்டடித்தாவு)

---

(44) தொல். செய். 149; பேரா. நச். உரை. [1]ஊணாரும். [2]சடையான்வண் மாகத்தான். [3]யானோர் வஞ். [4]பயக்கும்; [5]கழற்றாண்மேற் பூவொடுநீர் தூவி. (45) தொல். செய். 149. ஷை. [6]யாவதொன் றில்லை. (46) தொல். செய். 146. பேரா. நச். [7]முலைச்சுவட் டுடன் பிறப்ப.

நீறேறுந் திருமேனி நெடும்பகலே நிலவெறிக்க
ஏறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ;

பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடலுங் கொள்ளுமோ கொள்ளாதோ;

நாணுக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தழீஇக்கொளினும் பொங்காது போலுமால்
பூணுகந் தழீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ;

(நான்கடித்தாழிசை மூன்று)

[1]எரிகல னிமைக்கு மிடவயிற் றொடிக்கை
பரிகல னேந்தும் [2]பரிசிறந் ததுகொல்;
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்சம்
இமையவர் தம்மை [3]யிரந்துண் டதுகொல்; (ஈரடியிரண்டு)

இடையேழு பொழில்கட்கு மிமைப்பளவிற் [4]செல்லேறே
கடைதோறு மதுநிற்பக் கற்பித்த வாறெவன்கொல்;
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் [5]கங்கையே படர்சடையிற் கரந்ததே; (ஓரடி நான்கு)

பூண்டன வென்பு; [6]புனைவது தும்பை;
ஆண்டன பூதம்; அறைவது வேதம்;
இசைப்பன [7]பல்பேய்; எழீஇயது வீணை;
அசைப்பன வேணி; அதிர்வன பொற்கழல்; (இருசீரெட்டு)

எனவாங்கு; (தனிச்சொல்)

எல்வளை மகளி ரிடுபழி நசைஇப்
பல்கடை திரிதரூஉஞ் செல்வநிற் பரவுதும்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை

---

[1]எரிவளை தரிக்கு மிடவயிற் றொடிக்கை. [2]பரிசிரங். [3]யிரந்துகொண் டனை கொல். [4]கொல்லேறே. [5]கங்கையோ, கங்கையோர். [6]புனைந்தது. [7]பல்வேய்.

வென்றி வாய்த்த வன்றாள் [1]வளவன்
இமிழிசை வேங்கடம் போலத் [2]தமிழ்ந்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே. (சுரிதகம்)

(சிறுதேவபாணி)

47. வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக்
கண்ணளவோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையால்
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே.

(கோச்சகவகை)

48. பிறையணிந்த சடைமுடியோன் பிஞ்ஞகன் பெம்மான்
கறையணிந்த கண்டத்தான் கையிலங்கு சூலத்
திறையணிந்த நெஞ்சினோர்க் கின்றும் பிறவி
இம்மைப் பிணியு மியலும் பசியொடு
தம்மைத் துறந்திடும் தாவில் புகழுளதாம்.

49. கல்லாலந் [3]தண்ணிழற்கீழ்க் கல்வித் துறைபயந்த காமர்காட்சி
நல்லானை நல்லா ளொருபாக மாகிய ஞானத்தானை
எல்லாரு மேத்தத் தகுவானை யெஞ்ஞான்றும்
[4]சொல்லாதார்க் கெல்லாந் துயரல்ல தில்லைத் தொழுமின் கண்டீர்.

50. வண்டணி கொண்ட மதுமலர்க்கொன்றை யினமாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள்போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தான்
உண்டணி கொண்டநஞ் சுண்பார்க் [5]கமிழ்தாகுமே.

51. இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி
னெதிர்ந்த தானையை யிலங்கு மாழியின் விலங்கியோள்
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை
முனிந்து சென்றுடன் முரண்ட ராசனை முருக்கியோள்

---

[1]விடலை. [2]தமிழகத்து.(47) சிலப். 6. 35 அடியார்க். (48) தொல். செய். 149 நச். (49) தொல். செய். 149 பேரா; நச்: [3]தன்னிழற்கீழ்க் [4]சொல்லாடார்க். (50) தொல். செய். 149 பேரா; நச். [5]கழிந்தாமே. (51) யாப். வி. 25.

வடங்கொள் மென்முலை நுடங்கு நுண்ணிடை
மடந்தை சுந்தரி வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்
தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி
தலைக்கு வைப்பவர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

52. ஒரு வான் யாறோடு சடாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமான்
அரு வாயின னுயின னன்பர்க்
குரு வாயின னுள்ளததி னுள்ளே.

(கோச்சகவகை)

53. மையணி கண்டனை வானோர்தம்
ஐயனை யாயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணும்
மெய்யனை மேயது வீடே.

54. எரியெள் ளுவன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்று
ரெயிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிறந்தை யிரட்டும் விரல னிரண்டுருவா
யீரணி பெற்றவெழிற் றகைய னேரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேர்க்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிச்
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே.

(ஆசிரியத்துறைவகை)

55. பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கழகழற்கா லொருபாற்
நீடு குழலொருபா னீண்ட சடையொருபால் [றோன்றும்
வீடிய மானி னதளொருபான் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுருவ மாண்பெண்ணென் றறிவார் யாரே.

(52, 53) தொல். செய். 149. பேரா; நச். (54) தொல். புறத். 26, நச். (55) யாப். வி. 76; வீரசோ. யாப். 16,

(திரிபங்கி)

56. ஆதரந் தீரன்னை போலினி யாயம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம் பிரானினியார்
ஓதுமொன் றேயுன்னு வாரமுதே யும்பர் நாயகனே.

(மடக்கணிவகை)

57. வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவ தழகுபெற் றமன்றே
திருவடி மலரன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருவடிச் சிலம்பே
இருவினை களைபவ ரடைபதத் தனன்றே
இமையவர் புகலிறை யெனநினைத் தனன்றே.

சிவபிரான்சடை.

58. வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்க ணகைநிலவும்—நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானிலவு விற்போல் வரும்.

சிவபிரானணியும்பாம்பு.

59. பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னாரா வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி.

---

(56) தண்டி 95 உரை; திரிபங்கியாவது, ஒருசெய்யுளாய்நின்றே ஒருபொருள் பயப்பதன்றி, அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறுபொருள் பயக்கத்தக்கதாகவும் பாடப்படுவது; இச்செய்யுள்—[1] ஆதரந்தீர், மாதுபங்கா, ஏதமுய்ந்தா, ரோதுமொன்றே. [2] அன்னைபோலினியாய், வன்னிசேர் சடையாய், இன்னல்சூழ் வினைதீர், உன்னுவா ரமுதே. [3] அம்பிகா பதியே, வம்புநீண் முடியாய், எம்பிரா னினியார், உம்பர்நா யகனே—என்று மூன்று பிரிவாதல் காண்க. (57) ஷை 93 உரை; (58) ஷை, 31, (59) ஷை, 28,

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி-ஸு கார்த்திகை-மீ [பகுதி க.

Vol. XXI. November-December-1922. No. 1.

விஞ்ஞானதீபம்.

உற்பத்திவிளக்கம்.

சூரியசந்திரோற்பத்தி.

"ஆயிரங்கதிராழியொருபுறந்தோன்றகலத்தான்
மாயிருந்திசைசூழவருகின்றவரவுணர்த்த
மனக்கலமலரிணையுமலர்த்துவான்றானுத
லினக்கமலமுணர்த்துவபோன்றெவ்வாயும்வாய்திறப்பக்
குடதிசையின்மறைவதூஉமறையென்றுகொள்ளாமைக்
கடவுளர்தமூறங்காதகண்மலரேகரிபோக
ஆரிருளும் புலப்படுவானவனேயென்றுலகறியப்
பாருலகத்திருள்பருகும்பரிதியஞ்செல்வகேள்!

மண்டலத்தினிடைநின்றுவாங்குவார்வைப்பாராய்
விண்டலத்திற்கடவுளரைவெவ்வேறுவழிபடுவார்
ஓங்குலகமுழுதுபொரத்திருவுருவினென்றாகி
ஆங்கவரைவேறுவேறளித்தியென்றறியாரால்;

மின்னுருவத்தாரகைநீவெளிப்பட்டவிடியல்வாய்
நின்னுருவத்தொடங்குதலானெடுவிசும்பிற்காணாதா
ரெம்மீனுங்காலைவாயிடைகரந்துமாலைவாய்
அம்மீனைவெளிப்படுப்பாய்நீயேயென்றறியாரால்;

தவாமதியந்தொறுநிறையத்தன்கலையக்கலைதேயா
துவாமதியமுன்னைவெந்தொன்றாகுமென்றுணரார்

தம்மதியினொளிபுக்கங்கிருளகற்றுத்தவற்றுற்கோல்
அம்மதியம்படைத்தாயுநீயேயென்றறியாரால்;
நீராகிநிலம்படைத்தனை—நெருப்பாகிநீர்பயந்தனை
ஊரொழிவிற்காற்றெழுவினை—ஒளிகாட்டிவெளிகாட்டினை;
கருவாயினை-விடாரயினை-கதியாயினை-விதியாயினை
உருவாயினை-அருவாயினை-ஒன்றாயினை-பலவாயினை;
எனவாங்கு,
விரிதிரைப்பெருங்கடலமிழ்தத்தன்ன
ஒருமுதற்கடவுணிற்பரவுதுந்திருவொடு
சுற்றந்தழீஇக்குற்றநீங்கித்
துன்பந்தொடராவின்பமெய்திக்
கூற்றுத்தலைபணிக்குமாற்றல்சான்று
கழிபெருஞ்சிறப்பின்வழிவழிபெருகி
நன்றறிபுலவர்நாப்பண்
வென்றியொடுவிளங்கிமிகுகம்யாமெனவே"

என்னும் இப்பாணிப்பாட்டு இவ்வதிகாரத் துள்ளுறைபொருளைத் தருவதோடு தெய்வணக்கமுங் கூறுதலாற் பாயிரமாகுந் தகைமையது.

2. "மதியம்படைத்தாயுநீ" என்பதனை ஆராய்வாம். இந்நூல் விஞ்ஞானநூலாதலின் இதன்கட்கூறப்படும் பொருளனைத்தும் காட்சியளவை கருத்தளவை என்னும் எல்லையிகந்து வருதல் கூடாது. இவ்விரண்டளவையுங்கொண்டு மதியம் பரிதியினாற் படைக்கப்பட்டதென்னும் உண்மையை நிச்சயிப்பாம். முற்பக்கநாட்களிற் சூரியாஸ்தமன காலத்திற் சந்திரன் வானமண்டலத்திற் பொருந்திநிற்கிற நிலையையும் அவனது கலையளவையுங் கருதிநோக்குவோமாக. படுசுடரமயத்து மதியம் வானத்துச்சியில் நிற்கின்றநாள் முற்பக்கத்து எட்டாநாளாகும். இந்நாளிற் சந்திரவிம்பம் அரைவட்டஉருவாகத் தோற்றும், ஒளிபெற்ற பாகம் சூரியனை நோக்கிநிற்கும். எட்டாநாளுக்கு முந்தியநாட்களில் எற்படுகாலையிற் சந்திரன் மேற்றிசைக்கண்ணே அரைவட்டத்திற் குறைந்த பிறைவடிவாகத் தோற்றுவன். உச்சிவானம் (Zenith)தொட்டு அடிவானம் (Horizon) வரையுமுள்ள வட்டவாரத்தை (வட்டவாரம், வட்டத்தின் நாலிலொருபங்கு, (Quadrant,) வட்டபாகம் Semi-circle)த் தொண்ணூறுபாகை (Degree) யாகப் பிரிப்பாம். உவா

(அமாவாஸ்யை) நாளிற் சூரியனை அடைந்துநின்ற மதியம் தினமொன்றுக்குச் சராசரி பன்னிரண்டுபாகை யகன்று ஏறக்குறைய ஏழரைநாட்களில் உச்சிவானத்தை யடைகிறது. சந்திரதரிசனஞ்செய்தநாட்டொடங்கி அட்டமிநாள்வரையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரனுடைய பாகையகற்சியையுங் கலையளவையும் நோக்கிவருவோமாயின் சந்திரன் மேற்கினின்று கிழக்குநோக்கி யகலுகிருனென்னு முண்மையினையும் அகலஅகலக் கலைவளர்ச்சி கூடுகிறதென்ற உண்மையினையும்உணர்ந்துகொள்வோம். பத்தாநாளிற் சந்திரன் மேற்குத்திசையடிவானத்திலிருந்து நூற்றிருபதுபாகை அதாவது கிழக்குத்திசையடிவானத்திலிருந்து அறுபதுபாகை யகன்றுநிற்பதையும், விம்பம் மூன்றிலிரண்டுபாகம் நிறைவுற்றிருபபதையுங் காண்போம். பூரணைநாளிற் சந்திரவிம்பம் முழுவட்டமாயிருப்பதையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரோதயமாவதையுங் காண்போம். இங்ஙிலையிற் கோளமாகிய பூமி வடக்குத்தெற்குநோக்கிக்கிடக்கும் தனது நாராசத்தில் (Axis) வண்டிச்சக்கரம்போலவும் ஆடுகின்ற பம்பரம்போலவும் இடமாக அதாவது மேற்கிலிருந்து கிழக்குநோக்கிச் சுழலுகிறதென்னும் உண்மையினை மனதிற் சிந்திப்போமாயின் சூரியசந்திரர் நிலைபெயாதிருப்பினும் பூமியினது சுழற்சியினுற் சூரியசந்திரர் பூமியை வலம்வருவதாகத் தோற்றுதல்கூடுமென்பது புலப்படும். எங்ஙனமோவெனின், புகைவண்டியிலிருப்போனுக்கு வண்டியினசைவுதோற்ருது மலையும் மரனும் அசைவதாகத்தோற்றும் பொய்த்தோற்றம்போலவென்க. சந்திரதரிசனமானநாட்டொடங்கிப் பூரணைநாள்வரையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரனை நோக்கிவருவோமாயின் மேற்றிசையடிவானத்திலிருந்து கீழ்த்திசையடிவானத்துக்குச் சந்திரன்வரப் பதினைந்துநாட்கள் செல்லுமென்பது புலப்படும். வட்டபாகத்திற்குப் பதினைந்துநாட்கள் வேண்டியிருந்தமையால் முழுவட்டத்துக்கும் முப்பதுநாட்கள் வேண்டும். ஆகவே ஏறக்குறைய ஒருமாதத்திற் சந்திரன் பூமியை இடமாகச் சுற்றிவருகிறதென்பது பெறப்படுகின்றது. சூரியகிரணங்கள் சந்திரன்மேற்பட அதனுல் ஒளிபெற்றபாகம் பூரணைநாளில் முற்ருகத்தோற்றும், அந்நாளிற் சூரியனும் சந்திரனும் மேற்கிலுங் கிழக்கிலுமாகப் பூமியினேடு ஒரேமட்டத்திலிருத்தல் காரணமாக அமாவாசைதினத்திலும் இவைமூன்றும் ஒரேமட்டத்திலிருப்பினும் சந்திரன் பூமிக்குஞ் சூரியனுக்கு மிடையில் நிற்றலால், சூரியப்பிரகாசம்பட்ட

பாகம் பூமியிலிருப்போர்க்குத் தோற்றுதபாக மாகிறது. அகலஅகலச் சிறிதுசிறிதாகக் கலைகூடிப் பூரணைத்தினத்திற் கலைநிறைந்து பின்பு அணுகஅணுகக் கலைகுறைந்து அமாவாசைத்தினத்திற் கலை யற்றுப் போகிறது. இதனாற் சந்திரன் சுயம்பிரகாசமற்றதென்றும் சூரியப்பிரகாசம் தன்மேற்படுவதனால் ஒளிபெறுவதென்று மறிகின்றோம். அறிவுவிளக்கமில்லாத மாந்தரே இதனையறியார் என்னும் பொருடோன்றத் "தம்மதியினொளிபுக்கங்கிருளகற்றுத்தவற்றாற்கொல்,— அம்மதியம்படைத்தாயுநீயேயென்றறியாரால்" என்றார். சந்திரனுடைய ஒளியைமாத்திரமல்ல; உடலையுந் தந்தவன் சூரியனும் என்பதனைப் பின்னர்க் காட்டுதும்.

3. மாலைக்காலத்தில் மேற்குத்திசையிலேனும், அதிகாலையிற் கிழக்குத்திசையிலேனும் தோற்றுகிற அழகுவாய்ந்த சுக்கிரநக்ஷத்திரம் வானமண்டலத்துக்கு ஓர் அணிகலமாக விளங்குவது. நக்ஷத்திரம் என்னும் பொதுமொழி அசுவினிமுதல் இருபத்தேழு உடுக்கூட்டங் (Constellation) களுக்கும் சிறப்பாக வுரியது. புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழம், சனி, குபேரன், (Uranus), வருணன் (Neptune) ஆகிய ஏழும் கிரகங்கள் என்னும் சிறப்புப்பெயருடையன. இவற்றுக்கும் உடுக்கூட்டங்களுக்கும் உள்ள பேத மென்னையெனில், உடுக்கூட்டங்கள் சூரியனேபோன்று சுயம்பிரகாசமுடையன; கிரகங்கள் சந்திரனைப் போன்று சூரியனுடையஒளி தம்மேற்படுவதனாற் கட்புலனுக்குத் தோற்றுவன. இஃதெங்ஙனம் அறிவமெனில், சுக்கிரன், வியாழன், முதலிய கிரகங்களனைத்தும் சூரியனை அணுக அணுகக் கலைகுறைந்து சந்திரனைப் போலப் பிறைவடிவாகவும், அரைவட்டவடிவாகவுந் தோற்றுதலா லறிவோமென்க. இங்ஙனம் தோற்றுகிற தோற்றத்தைத் தூரதரிசனியென்னுங் கண்ணாடிமூலமாகப் பார்க்கலாம். கண்ணொளிகுறைந்தோர் மூக்குக் கண்ணாடியிட்டுக்கொள்வதுபோலக் கழிபெருந்தூரத்திலிருக்கும்பொருளை நோக்குவதற்குத் தூரதரிசனியென்னுங்கண்ணாடி பயன்படுகிறது. அதனாற்கண்டகாட்சியுங் கட்புலனாற்கண்டகாட்சியேயாகிறது. இக்கண்ணாடியினமைப்பை ஒளியியலுட் கூறுவாம். கிரகங்கள்யாவும் பூமிக்குஞ் சூரியனுக்கும் அணித்தாகவிருக்கின்றன. உடுக்கூட்டங்கள் சேய்மைக்கண் ணிருக்கின்றன. இதனை யெங்ஙனம் அறிவமோவெனில், கிரக உடுக்கூட்டங்களின்சாய்வினை இருவேறுகாலங்களில் நுணுக மட்டிட்டு

முக்கோணகணித (Trigonometry) முறையினல் அநுமானித்து அறிவோம். பரந்த ஒருவாவியின்மத்தியில் ஒரு செந்தாமரைமல ரிருப்ப தாகவும், வாவிக்கரையில் மீன்பிடிகாரர்கையிற் பந்தவெளிச்சங்களும் சமீபத்திலிருக்கிறவீடுகளில் விளக்குவெளிச்சங்களும் இருப்பதாகவும் நினைப்போம். தாமரைமலரின் நடுவே சூரியனும்; பொகுட்டினுள் இருக்கிறவிதைகளே கிரகங்களாம்; கரையிலிருக்கும் வெளிச்சங்களே உடுக்கூட்டங்களாம்என்று கருதல்கூடும். உடுக்களிற்பல சூரியனைப்பார்க் கிலும் பெரியன. ஒன்றரைக்கோடிசூரியர்கள்சேர்ந் தொன்ருகிய அள வினையுடைய உடுக்களும் உண்டு. இவை யேன் மிகுந்தபிரகாசமாகத் தோற்றவில்லையெனின், தூரத்தில் மலையுச்சியிற்ருேற்றுகிற காட்டெரி யானது விளக்குச்சுடர்மாத்திரமாகத் தோற்றுதல் கண்டிலமோ, அது போல இவையும் மிகுந்ததூரத்திலிருத்தலால், சிறிய அளவினவாகத் தோற்றுவவென்போம். சூரியனுடையஒளி பூமியை அடைவதற்கு எட்டு மினிற்றும் இருபதுசெக்கண்டும் செல்லுமென அறிவோம்—ஒளியினது வேகம் ஒரு செக்கண்டுக்கு ஒருலக்ஷத்து எண்பத்தாருயிரமைலாகும்; இதனை அளந்தறியும் மார்க்கத்தை ஒளியியலுட்கூறுவாம். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தை மேற்சொன்னகுறிப்பினை ஆதாரமாகக் கொண்டு கணித்தறியலாகும். சிலநாளைக்குமுன் புதிதாகக் கண்டுபிடித்த உடுவொன்றினது தூரம் எவ்வளவிற்று என அநுமானிக்கப்புகுந்த வானநூலோர் அவ்வுடுவினின்றும் உலகுக்கு ஒளிவருதற்குப் பதினுயிர வருஷஞ்செல்லுமென அறிந்தார்கள். இதனுல் அதன்தூரத்தை மட்டிட்டறியலாகும். மிகவுஞ்சமீபமான உடுக்களினின்றும் உலகுக்கு ஒளிவருதற்கு இரண்டரைவருஷஞ்செல்லும் என்ருல் நக்ஷத்திரங்களின் தூரத்தைப்பற்றி வேறுபேசவேண்டுவதென்ன. வாவியின்மத்தியிலுள்ள செந்தாமரைப்பொகுட்டினை மீட்டும் நினைப்பாம். அல்லியின் எல்லைக் குள் சூரியனும், பூமியும், ஏனையகிரகங்களும், பூமியைச்சுற்றியோடுஞ் சந்திரனும், ஏனைய கிரகங்களைச்சுற்றியோடுஞ் சந்திரர்களும் ஆகிய இவையெல்லாம் அமைந்திருக்கின்றன. இவற்றினுட் சுயம்பிரகாச முடையது சூரியன்மாத்திரமே. உடுக்கள் சூரியர்களாக அவற்றைச் சுற்றியோடுங் கிரகங்களுண்டென்பது சொல்லாமலேவிளங்கும்.

4. சூரியன் மத்தியிலிருக்க அதற்கு மிகவும்அணித்தாயிருப்பது புதன், அதற்கப்பாற் சுக்கிரன, அதற்கப்பாற் பூமி, அதற்கப்பாற் செவ்

வாய், அதற்கப்பால் வியாழம், அதற்கப்பாற் சனி, அதற்கப்பாற் குபேரன், அதற்கப்பால் வருணன். இவற்றின் தூரம், இவை சூரியனைச் சுற்றியோடுதற்குச் செல்லுங் காலம், இவற்றின் அளவு முதலியவிஷயங்களையும், உபக்கிரகங்களாகிய சந்திரர்களினியல்பையும், ராகு கேதுக்களினியல்பையும் பின்னர்க் கூறுவாம். கிரகங்களும் உபக்கிரகங்களும் சூரியனிடமிருந்து ஒளியைமாத்திரமல்ல உடலையும் பெற்றனவாம் என்பதனை இப்பொழுது ஆராய்வாம்.

"தொன்முறையியற்கையின்மதியொ
... ... மாபிற்றுகப்
பசும்பொனுலகமுமண்ணும்பாழ்பட
விசும்பிலூழியூழ்செல்லக்
கருவளர்வானத்திசையிற்றோன்றி
உருவறிவாராவொன்றனூழியும்
உந்துவளிகிளர்ந்தவூழூழியுஞ்
செந்தீச்சுடரியவூழியும்பனியொடு
தண்பெயறலைஇயவூழியுமவையிற்
றுண்முறைவெள்ளமூழ்கியார்தருபு
மீண்டும்பீடுயர்பீண்டியவற்றிற்கும்
உள்ளீடாகியவிருநிலத்தூழியும்
நெய்தலுங்குவளையுமாம்பலுஞ்சங்கமு
மையில்கமலமும்வெள்ளமுநுதலிய
செய்குறியீட்டங்கழிப்பியவழிமுறை
கேழறிகழ்வரக்கோலமொடுபெயரிய
வூழியொருவினையுணர்த்தலின்முதுமைக்
கூழியாவருமுணரா
ஆழிமுதல்வநிற்பேணுதுந்தொழுது"

என்பது சங்கச்செய்யுளாகிய கீரந்தையார்பாட்டு (பரிபாடல். 2)

"மண்ணுலகமும் பசும்பொனுலகமும் பாழ்பட ஒன்றற்கொன்று மாறிவருதலாகிய பழையஇயல்பினையுடையமதியமும் ஞாயிறுங் கெடுதலால் அழகிழந்த இயல்பிற்றாக விசும்புகெட்டஊழிகள் முறைமுறையாகக் கழிந்தனவாக, தன்குணமாகிய ஒலியுடனேதோன்றி உருவுகாணப்படாத வளிமுதற்பூதங்களின் பரமாணுக்கள்வளர்கின்ற வானமாகிய முதற்பூதத்தினது ஊழியும், அவ்வானத்தினின்று எல்லாப்பொருள்களையுஞ் சலிப்பிக்குங் காற்றுத்தோன்றிய முறைமுறையாகிய ஊழி

களும், அக்காற்றினின்று செந்தீத்தோன்றிய ஊழிகளும், அத்தீயினின் றுந் தோன்றிப் பனியும் மழையும் பெய்த ஊழிகளும், அவற்றிற்குப் பின்பு அப்புனலினின்றுந்தோன்றுதலான் மீண்டும் வெள்ளத்தினுட் கிடந்து முன்றேன்றிய நான்குபூதங்கட்குப் உள்ளீடாகிய இருநிலத்தி னூழியும் என் றிவ்வூழிகளானே நெய்தலுங் குவளையும் ஆம்பலும் சங்க மும், கமலமும் வெள்ளமும் என எண்குறித்திட்ட பெயர்களது கால வீட்டங் கழிந்தபின் உயிர்க ளுளவாதற்பொருட்டு அந்நிலத்தினை எடுத்திட்ட கேழற்கோலத்தாற் றிகழ்வரப் பெயர்பெற்ற இவ்வாரககற்பம் நின்செயல்களுள் ஒருசெயலின்பெயராமதனை யுணர்த்துதலின் அச்செயல் கள் பலவற்றையுஞ்செய்கின்ற நின் முதுமைக்குள்ளகற்பங்கள் யாவரா னும் அறியப்படாத ஆழிமுதல்வ! நின்னையாந் தொழுது பேணுதும்" என்பது உரை. இதனுல் ஞாயிறும் மதியமும் ஒருகாலத்து இல்லாமற் போவனவாம் எனவும், அழகிழந்தவிசும்புங்கெட்டுப்போகுமெனவும், பின் னர்த் தோற்றக்கிரமத்தில் முதற்பூதமாகிய வானந்தோற்றிப் பலவூழிக் காலங்களுக்கு வானமாத்திரமே தனித்திருக்குமெனவும், பின்னர் வானி னின்று வளிதோற்றிப் பலவூழிக்காலங்களுக்கு வானும் வளியும் ஆகிய இருபூதங்களே யிருப்பனவாமெனவும், பின்னர் வளியினின்று தீயும் தீயி னின்றுநீரும், நீரினின்று நிலனுந் தோற்றுவனவாமெனவும், பின்னர் உயிர்க்கூட்டங்களுள் ஓரறிவுயிர் தோற்றுவனவாமெனவும் ஓரறிவுயிரி னின் றீரறிவுயிரும், ஈரறிவுயிரினின்று மூவறிவுயிரும் பிறவும் முறை முறையாகத் தோற்றுவனவாமெனவும் அறிகின்றேம். உயிர்த்தோற் றத்தைப்பற்றித் தாவரசங்கமோற்பத்தி என்னும் மூன்றும் அதிகாரத்தி னுள் விரிவாகக் கூறுவாம். மணிமேகலை நூலாரும்.

"ஆகாயம்வெளிப்பட்டதன்கண்
வாயுவெளிப்பட்டதன்கணங்கி
யானதுவெளிப்பட்டதன்கணப்பின்
றன்மைவெளிப்பட்டதின்மண்வெளிப்பட்டு
....
பூதவிகாரத்தான்மலைமரமுத
லோதியவெளிப்பட்டுலகாய்நிகழ்ந்து
வந்தவழியேயிவைசென்றடங்கி
யந்தமில்பிரளயமாயிறுமளவும்
ஒன்றுயெங்கும்பரந்துநித்தியமாம்,"

என்றார். இது விஞ்ஞானநூலாகலின், பிறநூன்முடிபுகள் ஆதாரமா வனவேயன்றிப் பிராமாணமாகா. வானினின்று வளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், நீரினின்று நிலனும் தோற்றும் விதத்தையும், பின்னர் நிலத்தினுள் நீரும், நீரினுட் டீயும், தீயினுள் வளியும், வளியினுள் வானும் அடங்கும்விதத்தினையும் கண்கூடாகக் (பிரத்தியக்ஷமாக) காட்டல்வேண்டும்; ஆகலின், அகப்பூதம், அகப்புறப்பூதம் என்பனவற்றைப் பின்னராராயவைத்துக்கொண்டு இப்பொழுது புறப்பூதத்தை யாராய்வா னெடுத்துக்கொள்வாம். கல், மணல், மரம், பொன முதலிய கட்டிப்பொருள்களனைத்தும் நிலன் என்னும் வகையின; நீர், நெய், உருகியபொன், உருகியவெண்ணெய் அனைத்தும் நீரின்வகைய; விளக்குச் சுடர், ஆவியுருவமாகத்தோற்றுகிற நீராகிய மேகம் இவையெல்லாம் தீயின்வகைய; தோற்றமில்லா நீராவி, காற்று, கரிவளி (Carbonic Acid Gas) இவையெல்லாம் வளியின்வகைய; அனைத்துப்பூதங்களும் தோற்றுதற்கிடனுயிருக்கும் மின்னுரு (Electrom) வானின்வகைத்து. எரிந்துகொண்டிருக்கிற மெழுகுதிரியொன்றில் உண்டாகிற வேறுபாடுகளை யாராய்வாம். கட்டிப்பொருளாகிய மெழுகு வெப்பத்தினுல் உருகி நீர்ப்பொருள் ஆகிறது; நீர்ப்பொருள் சுடராக மாறுகிறது; சுடராகிய தீ கட்புலனுக்குத் தோற்றாத கரிவளியும் நீராவியும் ஆகிறது, வளி மின்னுருவாகும் மார்க்கத்தினை மின்னியக்கவியலினுட் கூறுவாம். கட்புலனுகா நீராவி குளிர்ந்து கட்புலனுகிய மேகமாகிறது; மேகங் குளிர்ந்து நீராகிறது; நீர் குளிர்ந்து ஆலங்கட்டியாகிறது. கட்புலனுகா நீராவி வளியின்வகையது; கட்புலனுகும் மேகம் தீயின்வகையது; ஆலங்கட்டி நிலத்தின்வகையது; இவைபோல வேறுபல உதாரணங்களையும் ஆராய்ந்தறிந்துகொள்க. வான்குளிர வளியாகும்; வளி குளிரத் தீயாகும்; தீ குளிர நீராகும்; நீர்குளிர நிலனுகும்; என்னும் இவ்வுண்மைகள் மேலையுதாரணங்களால் அறியக்கிடக்கின்றன. வெப்பம் மிக்கால் கட்டிப்பொருளெதுவும் உருகி நீர்ப்பொருளாய்விடும் என்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோம். எரிமலை தீக்கொப்புளிக்கிற சமயங்களிற் கல்லு முருகியோடுவனவாம். உருகியபொருள் மீண்டும் வெப்பமிக்கிருப்பின், கட்புலனும் ஆவியாகிய தீயாக மாறும்; இது வளியாகமாறும். வளி வானுகுமென்பதனை மின்னியக்கவியலினுள் ஆராய்வாம்.

5. சூரியனும் கிரகங்களும் உபக்கிரகங்களும் ஒன்றுசேர்ந்து தீப்பிழம்பாயிருந்தகால மொன்றுண்டு. இதனையே கீரந்தையார் "செந்தீச்சுடரிய வூழியும்" எனக் குறிப்பிட்டார். இந்தவூழியில் வானும், வளியும், தீயும் ஆகிய மூன்று பூதங்களே யிருந்தன; நீரும் நிலனும் இருந்ததில்லை. இதற்குமுந்தி வானும் வளியும் இருந்த ஊழிகளும், வானமாத்திரம் தனித்திருந்த ஊழிகளும் பலவாகக் கழிந்தன. செந்தீச்சுடரிய ஊழியிற் சூரியனும் கிரகங்களும் ஒன்றுபட்டு அனற்பிழம்பாயிருந்த தோற்றத்தையனைய அழற்பிழம்புகள் (Nebula) இன்றும் வானமண்டலத்தி லுள்ளன. அனற்பிழம்பு சுழன்றுகொண்டிருந்தமையினாற் கோளவடிவாயிற்று. வெப்பங் குறையக்குறைய அளவிற் சுருங்கிக் கொண்டுபோன கோளத்தினின்று ஒருபாகம் பிரிந்து தன்னைத் தானே சுழல்வதும் தான் முன்னின்று பிரிந்த பெரியகோளத்தைச் சுற்றிவருவதுமாயிருந்தது. இங்ஙனேபிரிந்த சிறியகோளம் சிறிதாதலிற் சீக்கிரத்திற்குளிர்ந்து நீர்த்தன்மையையும், பின்னும்இறுகி நிலத்தன்மையையும் அடைந்தது. அங்ஙனமாயினும், சில தனிப்பொருள்கள் நீராகவும் வேறு சில தீ, வளியாகவும் நிலைபெற்றிருந்தன. இது எக்காரணத்தினாலாயிற்று என்பதனை அடுத்தபிரிவினுள் ஆராய்வாம். இங்ஙனந் தோற்றியதே வருணன் என்னுங் கிரகமாகும். அனற்பிழம்பாகிய பெரியகோளத்தினின்று பின்னும் ஒருசிறுபகுதிபிரிந்து குபேரன்என்னுங்கிரகமாயிற்று; பின்னர் இம்முறையே சனி, வியாழம், செவ்வாய், பூமி, சுக்கிரன், புதன் இவை யுற்பத்தியாயின; நடுவினின்ற அனற்பிழம்பு சூரியனென நிலைபெற்றது. உபக்கிரகங்கள் தோற்றியமுறையைச் சொல்லுவதற்கு, சந்திரனது உற்பத்தியை ஆராய்வாம். பூமி "செந்தீச்சுடரிய" பிழம்பாகச் சுழன்றுகொண்டிருந்தகாலத்தில் அதனினின்றொருபாகம் பிரிந்து பூமியைச்சுற்றிச்செல்லுகிற உபக்கிரகமாகிய சந்திரனாயிற்று. சிற்றளவினதாகிய சந்திரன் அறக்குளிர்ந்துவிட்டமையால் நீர், வளி, தீ இவை யாவும் அங்கு, நிலனாய்விட்டன. ஆதலால் அங்கு காற்றுவீசுவது மில்லை; புற்பூண்டு முளைப்பது மில்லை; மிருகமானிடசஞ்சாரமு மில்லையென் றெண்ணவேண்டியிருக்கிறது. கிரகங்களில் நம்மையொத்த மானிடர் வசித்தல்கூடும். (காசிகாண்டத்திற் சிவசன்மாவென்னும் வேதியன் பலவுலகங்களையுஞ் சென்று கண்டதனை ஆராய்க) சூரியன் அனற்பிழம்பாக நடுநிற்கக் கிரகங்களெல்லாம சுற்றிவருகின்றன. பின்னும் ஓர் ஊழியில் நம்முடையபூமி சந்திரனைப்போலக் குளிர்ந்து நீரும் வளியும் அற்று உயிர்ச்சஞ்சார மில்லாதுபோய்விடும். சூரியனிலிருந்து பிறகிரகங்களும் உபக்கிரகங்களும் பிறப்பன. கடையூழியிற் சூரியனே அறக்குளிர்ந்து ஒளியிழந்து நிலனுந்தன்மையை யடைய அழகிழந்த விசும்புங் கெட்டு யாண்டும் இருட்பிழம்பாகிய தோற்றம் வந்தெய்தும்.

6. "நீராகிநிலம்படைத்தனை, நெருப்பாகி நீர்பயந்தனை; அருவாயினை, உருவாயினை, ஒன்றாயினை, பலவாயினை" என "ஆயிரங்கதிராழி"

யென்னும் பாணிப்பாட்டினுட் கூறியிருக்கும் உண்மைகள் இங்ஙனே தெளியப்படுவனவாம். வெப்பமுந் தட்பமுமே தோற்ற ஒடுக்கத்துக்குக் காரணமாயிருத்தலை யாராய்ந்தனம். இனி வெப்பதட்பநிலையை யளந்து கொள்ளும்விதத்தினையும் இவற்றின் எல்லையினையும் ஆராய்வாம். நீர், எண்ணெய் முதலியவற்றின் வெப்பதட்பநிலையை யளக்கக்கருவியாகநிற்பது பாதரசத்தாபமானி, (Mercury Thermometer). பாதரசம் வெப்பத்தினால் அளவு அகலும் என்னும் ஆதாரத்தைக்கொண்டு இக்கருவியமைக்கப்பட்டது. கண்ணாடிக்குழா யொன்றினுட் பாதரசத்தையடைத்து ஆலங்கட்டியினுள்வைக்கக் குறுகி ஓர் எல்லையு ணிற்கும். பின்னர்க் கொதிக்கிறஜலத்தின்மேலுள்ள நீராவியினுள்வைக்க வேறோரெல்லையு ணிற்கும். இவற்றை முறையே சுன்னமும் நூறுமாகக் கொண்டு இடையேயுள்ள அளவை நூறுபாகை (Degree) யாக்கிக் கொள்ளுவாம். நீருறைகின்ற எல்லை (Freezingpoint) சூன்யபாகையாகவும், நீர் கொதிக்கின்ற எல்லை (Boiling point) நூறுபாகையாகவுங் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பொருளுக்கும் உறைகின்ற எல்லையும் கொதிக்கின்ற எல்லையும் உண்டு. சூனியபாகையிற் குறைந்ததட்பநிலையையும் குறையொன்று, குறையிரண்டு என்று அளந்து காணலாம். (Minus Plus என்னும் ஆங்கிலமொழிகளைக் "குறை," "மிகை" எனக் குறியிடுசெய்வாம்; "சய," "சக" என்னும் வடமொழிகளை வழங்குவதும் ஏற்புடைத்து) தட்பநிலையின் கீழெல்லை குறை இருநூற்றெழுபத்துமூன்றுகும். இவ்வெல்லைவருமுன் நம்மைச்சூழவிருக்கும் வளிதானும் ஆவியாகி நீராகிக் கட்டியாய்விடும். சூரியகோளம் ஏழாயிரம் பாகையின்மேற்பட்ட வெப்பநிலையுடையது. இவ்வெப்பநிலையில் உலகிலுள்ள நீர்ப்பொருளும், நிலப்பொருளும், தீ, வளி ஆகிய நிலையையடைவன. சாதாரணநிலையிற் கட்டியாயிருக்கிறபொருள்கள் வெப்பஏற்றத்தினால் நீராதலும் ஆவியாகவிருக்கிறபொருள்கள் தட்பத்தினால் நீராதலும் இயற்கையாயிற்று. உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் எண்பதின்மேற்பட்ட தனிப்பொருள் (Element) ஆகவும், கோடிக்கணக்கான கூட்டப்பொருள்கள் (Compounds) ஆகவும் பிரிக்கலாம். ஒவ்வொரு பொருளுக்கும் கொதியெல்லை உறையெல்லை வேறுபட்டிருப்பதனால் ஒரே தாபநிலையிற் சில நிலனாகவும், சில நீராகவும், சில தீயாகவும், சில வளியாக்வும் தோற்றுவன அங்ஙனமாயினும், அருக்கனது வெப்பநிலையையொத்த வெப்பநிலையில் அனைத்துப்பொருளும "செந்தீச்சுடரிய" நிலையி லிருப்பன. கீழெல்லையாகிய குறை இருநூற்றெழுபத்துமூன்று என்னும் பாகையின அனைத்துப்பொருளும் நிலனாய்விடுவன. இவற்றின்விரிவினை அனலியலுள்ளும் ரசாயனவியலினுள்ளுங் கூறுவாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர்,
சென்னை.

பண்டித-மயில்வாகனன்,
B. Sc. (Lond.)

வடமொழியும் தமிழும்: ஓர் எதிருரை.

பாணினீய-லகுதீபிகையின் முன்னுரையைக்குறித்து, ஸ்ரீமாங்-சு. இராஜையனவர்கள் சென்ற ஆவணிமாதச் செந்தமிழ்ப்பத்திரிகையில் எழுதியிருப்பனவற்றை நன்றாகக் கவனித்து வாசித்தேன். ஐயனவர்களது உரையினைமட்டும் நோக்கிய அளவில் செந்தமிழ்நேயர்கள் முன்னுரையின்கருத்தைப் பிழைபட வுணர்தல்கூடும் என்றெண்ணி எதிருரையொன்று விரைந்து எழுதலாயினேன்.

நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் ஏற்பட்டுள்ள அடிப்பாட்டுத் தொடர்பினைக் குறித்து இருவேறுகொள்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிலர் தமிழ் ஒரு தனிப்பாஷை யென்பர்; இக்கொள்கையுடையார் பிஷப் கால்டுவெல் (Bishop Caldwell) முதலிய பாஷா சாஸ்த்ர விற்பந்நர்கள். சிலர் வடமொழியினின்றும் பிறந்த வொரு பாஷையே தமிழ் என்பர்; இக்கொள்கையுடையார் ஸ்ரீமாங் R. சுவாமிநாத ஐயரவர்கள் முதலிய அறிஞர்கள். 'நற்றாய்' என்று முன்னுரையிற் சுட்டியொழித்தது இவ் இரண்டாவதுவகைத் தொடர்பினையே. ஒன்றற்கொன்று முற்றும் மாறுபட்ட இக்கொள்கைகள் சிலகாலத்திற்கு முன் மிக்க வாதப்பிரதிவாதங்களுக்குக் காரணமாயிருந்தனவெனப் பலரும் அறிவர். மேன்மேலும் வந்துபெருகிக் குவிந்துகொண்டிருக்கும் நூதன விபவகாரங்களினாலே முற்றும் புதையுண்டுகிடக்கும் இவ்விவாத விஷயத்தை யிப்போது கிண்டிக் கிளறி வெளிக்கொணர்ந்து சொற்போராடுவது எனது நோக்கமேயன்று. லகுதீபிகையின் முன்னுரை அத்தகைய விவாதத்திற்கு இடங்கொடுப்பதுமன்று. வடமொழியால் நமது தமிழ்மொழி பண்டைக்காலந்தொட்டுப் பலபிரகாரத்தானும் போஷிக்கப்பட்டு வளர்ந்துவந்திருக்கிறதென்ற ஒரு விஷயமே யான் கூறவமைந்தது. யான் கூறியுள்ளதும் இதுவே. 'செவிலித்தாய்'நிலை யென்று எனதுமுன்னுரை குறிக்கின்றதும் இதனையே யாகும். வேறு யாதொரு தொடர்பினையும் உட்கொள்ளாது 'போஷித்துவளர்த்தல்' என்ற ஒரு கருத்தினைமாத்திரம் தந்துநிற்பது செவிலித்தாய்நிலை. 'செவ்விதின் வளர்த்த தாதி செவிலி கோடாய் கைத்தாயாம்' என்பது சூடாமணி

நிகண்டு. இச் செவிலித்தாய்நிலைக்கும் நற்றாய்நிலைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. தமிழுக்கு 'நற்றாய்' என்று வியவகரிக்கும்பொழுது தமிழ்ப்பாஷையின் உற்பத்தியைப்பற்றிய ஆராய்ச்சியே பிரதானமாகும். இவ் ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளையும் கற்றுணர்தல் அத்தியாவசியமாக வேண்டப்படுவது; பாஷாசாஸ்த்ரவிசாரண மார்க்கத்தில் தக்கபயிற்சியும் வேண்டும்; இத் தகுதியுடையாரே 'நற்றாயோ? அன்றோ?' என்னும் விசாரணையை மேற்கொள்ளுதற் குரியர். விசாரணையின்முடிபும் வெகுகாலம்வரை கேவலம் 'கோள்கை'மாத்திரமாகத்தான் இருத்தல்கூடும். தமிழுக்குச் செவிலித்தாய் என்று வியவகரிக்கும்பொழுது மேற்கூறியவற்றிற் பெரும்பாலன வேண்டப்படுவவல்ல. இதற்கு உற்பத்திப்பற்றிய ஆராய்ச்சி அநாவசியகம்; தமிழ், வடமொழி யென்ற இருபாஷைகளின் உணர்ச்சியே போதியதாகும்; பாஷாசாஸ்திரப்பயிற்சியும் அத்தியாவசியமாக வேண்டப்படுவதன்று. இதற்குரிய விசாரணையின்முடிபு கேவலம் கொள்கைமாத்திரம் ஆதலின்றிச் சுலபசாத்தியமாய் யாவரும் அங்கீகரிக்கத்தகுவதோர் உண்மையாயும் நிற்கக்கூடியது. தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாய்நிலையிலுள்ளதென்று தெளிவித்தலே முன்னுரையின் முழுநோக்கமாகும்.

மேலேகாட்டிய வேறுபாட்டினை ஐயரவர்கள் நன்கு அறிந்தவர்களாகக் காணவில்லை. 'தெய்வச்செந்தமிழ்மொழிக்குச் செவிலித்தாயென வடமொழியைக்கூறுதலே பொருந்துவதாகுமெனப் பிள்ளையவர்கள் கூறினும் அவர்கள் நுணுக்கவுரையின்கட் கருத்தொருப்படுகின்றிலேம்' என்று ஐயரவர்கள் எழுதுதலால் 'செவிலி' என்றதன்கருத்து நிராசேஷபமாயுள்ளதென அவர்கள் ஒருவாறு உணர்ந்தமைதோன்றும். இவ்வாறு ஊகித்தல் சரியாயின், 'தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?' என்று தமது மறுப்புரைக்கு மகுடஞ்சூட்டி அவ்வுரையினிறுதியில் 'இன்னிசைவாய்ந்து உலகெங்கணும் தன்னிசைபரப்பிய கரையிறந்த கடலன்ன நஞ்செந்தமிழ்க்கு மதிவளம்பெருக்குஞ் சிறப்பியல்பு ஒருசிறிதுமில்லா வடமொழியைச் செவிலித்தாயெனல் பொருந்தாமையறிக' என்று அவர்கள் கூறிமுடித்தலின்கருத்து அறிதற்கரிதாயிருக்கின்றது. உலகமெங்கணுந் தன்னிசைபரப்பிய செந்தமிழ்! கரையிறந்த கடலன்ன செந்தமிழ்! மதிவளம்பெருக்குஞ் சிறப்பியல்பு ஒரு

சிறிதுமில்லா வடமொழி! இவைபோன்றன உண்மையாமெனநம்புவாரை இவ் விருபதாம்நூற்றுண்டிற் காணுதலரிது. எனது தாய்மொழியின் புகழ் உலகெங்கும் பரவவேண்டுமென்ற ஆசை மிகவுடையேன். எனது தாய்மொழியில் அளவற்றநூல்கள் இயற்றப்பட்டு அவை கடல்போற் பெருகவேண்டுமென்ற விருப்பமும் மிகவுடையேன். ஆனால், ஏற்கனவே இவ்வாசைகள் நிறைவேறிவிட்டன என்றெண்ணுதல் உருவெளித்தோற் றங் கண்டதனேடொக்கு மென்று ஐயனாரவர்களுக்கு அன்புடன் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.

'செவிலித்தாய்' என்ற கருத்தினை ஐயனாரவர்கள் தெளிவாயுணர்ந்து கொள்ளவில்லையென்றேன்: இதன் உண்மை வேறுவழியாலும் வெளி யாகின்றது. மறுப்புரையின் தொடக்கத்தில் 'வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழி'யென்பது எனக்கு உடம்பாடென்றும் அதனை வலியுறுத்து தற்கே யான் ஏதுக்கள் காட்டியிருக்கிறேன் என்றும் கூறுகின்றார்கள். அன்றியும், 'தமிழ்மொழி மிகப் பழையதாதலும் அஃதொரு தனித்த முழுமுதற்சொல்லாதலுங் கருதாத'வனாவே னென்று என்னை யவர்கள் குறிப்பதோடு, அவர்களது மறுப்புரையில் 10-பக்கங்கள்வரை தமிழின் முழுமுதற்றன்மையினையும் அதன் பழமையினையும்பற்றி விரித்தெழுது கின்றார்கள். ஈண்டெல்லாம் 'செவிலி'யென்பது பிழைபட வுணரப்படு கின்றது. தமிழின் முழுமுதற்றன்மையை யான் மறுத்ததுமில்லை; வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழி யென்பதில் யான் உடன்பட்டது மில்லை. இக்கருத்துக்கள் என்னுடையனவே யல்ல.

இங்ஙனமாக, யான் கருத்திற்கொள்ளாதனசிலவற்றை எனது கருத்துக்களெனத் தாமே நூதனமாகப் படைத்து ஏறட்டுக்கொண்டு அவற்றைமறுத்தல் ஐயனாரவர்கள் புதிதாய்க்கண்ட தருக்கநெறிபோலும்! என்னைப்பிழைபடவுணர்ந்து எனது முன்னுரையிற் காரணங்களால் வலி யுறுத்து நிறுவிய பிரதான முடிபினை அறவே கைந்நெகிழவிட்டு ஏதோசில எழுதுகின்றார்கள். மறுப்புரையின் முக்யகதி இதுவே.

யான் தந்துள்ள ஏதுக்களையேனும் சரியாக வுணர்ந்திருக்கிறார் களா வென்பதை நோக்குவோம். தமிழ்மொழியை வடமொழி போஷித்து வந்திருக்கிறதென்பது மூன்றுவாயில்களால் அறியலாகும். அவை: (i) தமிழிலுள்ளசொற்கள் [Vocabulary] (ii) தமிழ்நூல்விஷயங்கள்

[Subject-matter] (iii) தமிழிலக்கியமரபு [Literary tradition.] என்பனவாம். இவற்றிற்கு அடிப்படையாக வடமொழியோடு ஒத்து நிற்கக்கூடிய அளவில் தமிழை வளம்படுத்தவேண்டுமென்ற பேரவா தமிழ்நாட்டில் வேரூன்றிக் கிடந்தது. தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுக்கப்புகுந்த நூல்கள்தாமும் வடமொழிவியாகரணங்களுக்குப் பெரிதும் கடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வடமொழியோடு தமிழ் மிக நெருங்கிய தொடர்புடையதாயிருத்தல்பற்றித் தமிழிற் பாண்டித்தியம் பெறவிரும்புவோர்க்கு வடமொழியுணர்ச்சி யின்றியமையாததாகும். எனது முன்னுரையின் ஸாராம்சம் இவ்வளவே. சொற்கடனைப்பற்றிக் கூறுமிடத்துச் சுவாமிநாததேசிகரது கருத்தும் எனதுகருத்தோடொத்திருப்பதனை யெடுத்துக்காட்டினேன். இலக்கணவிஷயத்தில் வடமொழிவியாகரணங்களுக்கு நாம் கடப்பட்டிருக்கிறோ மென்பதை யுணர்த்துமிடத்து, சுப்பிரமணியதீக்ஷிதர் அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முறையே பாணினீயமும் ஐந்திரமும் முதனூல்களாமெனக் கொள்வரென்றும் பரஞ்சோதிமுனிவர்முதலானோர் பிறவாறு கொள்வரென்றுங்கூறி, இஃது எவ்வாறாயினும் வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பியம் முதலியன கடப்பட்டுள்ளன வென்பது மேற்குறித்த அனைவர்க்கும் அங்கீகாரமாம் என்றேன். வடமொழியுணர்ச்சி தமிழிற் பாண்டித்தியம்பெறவிரும்புவோர்க்கு இன்றியமையாததாமென வுரைக்குமிடத்து ஆசிரியர் சிவஞானசுவாமிகளும் இங்ஙனமே கருதினரெனச் சுட்டினேன். தேசிகர், தீக்ஷிதர், சுவாமிகள்: ஆகிய மூவரும் கூறியுள்ளன எனது முடிபிற்கு ஏதுக்களாமென என்னால் தரப்படவேயில்லை. உண்மை யிவ்விதமிருக்க, இப்பெரியோர் மூவரும் கூறியன என்னால் ஏதுக்களாகக் காட்டப்பட்டனவென்று ஐயரவர்கள் எழுதுதல் யாது காரணம்பற்றியென அறியக்கூடவில்லை. ஒருவரது கொள்கைக்கு அல்லது முடிவிற்குப் பிறரொருவரது கருத்து ஒருபொழுதும் ஏதுவாதலில்லை. அவையிரண்டும் உண்மையென்று தெளியப்பட்டவிஷயங்களை (facts) அடிப்படையாகக்கொண்டு பிறத்தல்வேண்டுமென்பது நியமம்.

இனி, இம்மூவரும் தந்துள்ள கருத்துக்களை யெவ்வாறு தருக்கித்துத் தங்கருத்தை நிலையிடுகின்றார்களென நோக்குதல்வேண்டும். 'ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ?' என்று தேசிகர் வினவியதனை

8 பக்கங்களில் (401–408) ஆராய்கின்றார்கள். ஆனால் அஃது ஓரிடத்தும் மறுக்கப்படவே யில்லை. 'தமிழ்மூதுமக்கள் வழங்கிவந்த தமிழிற் பிறமொழிச் சொற்களும் வந்துகலத்தல் இயல்பே' யென்பதுதான் ஐயனாரவர்களது முடிபு. எனது முன்னுரையில் 'இதனைத் தமிழிற்கோர் குறைபாடாகக் கருதுதல்தவறு. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சிகாரணமாகவும் நாகரிகமுதிர்ச்சி காரணமாகவும் சொற்கடன் ஏற்பட்டுளது' என்று எழுதியிருந்தேன். ஐயனாரவர்களும் யான் கூறியதனையே மேற்கொண்டு அதற்கு 'விருத்தியுரை' யொன்று பெருக்கி யெழுதியிருக்கின்றார்கள்.

அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முதனூல் முறையே பாணினீயமும் ஐந்திரமும் ஆமென்று சுப்பிரமணியதீக்ஷிதர்கூறியதனை 5 பக்கங்களில் (411–415) விசாரணை செய்கின்றார்கள். இங்ஙனம் 'முதனூல்' எனக் கூறுதல் முற்றும் பிழையென்பது சிவஞானசுவாமிகளால் நன்கு எடுத்துக்காட்டப் பட்டுளது. முதனூல் என்ற கருத்து வேறு; ஒன்றற்குப் பிறிதொருநூல் கடப்பட்டுள்ளது என்ற கருத்து வேறு. இதனை நாம் ஞாபகத்தில் வைத்தல்வேண்டும். ஐந்திரம் முதலியன நமது தமிழிலக்கணங்கட்கு முதனூல்களாமெனக்கூறுவார் இக்காலத்து யாரும் இரார் என்றெண்ணுகிறேன். ஆனால் ஐயனாரவர்கள் முதனூல்களல்லவென்பதனோடுமட்டுந் திருப்தியடையவில்லை. 'பாணினீயமுதலிய வடமொழிவியாகரணங்கட்குத் தொல்காப்பியம் முற்பட்டுள்ள தென்பதும், அதுவே சரித்திரநூல்வல்லா ரெல்லார்க்கும் ஒப்ப முடிந்ததென்பதும்' காட்டமுயன்றார்கள். 'பாணினீயமுதலிய வடமொழிவியாகரணங்கள்' என் றெழுதப்படுகின்றது. இங்கே வியவகரிக்கப் பட்டுள்ளனவெல்லாம் இரண்டே வியாகரணங்கள்: ஐந்திரமும் பாணினீயமும். ஐந்திரவியாகரணத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனல் அவர்களது கருத்தாகவேண்டும்! சிறிதுமுன்பு 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என அவர்கள் தாமே எடுத்துக்கூறிப் பின்னர் ஐந்திரத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனக் கருதும்படி யெழுதுவது வியப்பாகவிருக்கின்றது. சரித்திரநூல்வல்லார்க்கெல்லாம் ஒப்பமுடிந்த தென்றார்கள். இவ்வாறு கூறியவர்கள் சரித்திரநூல் வல்லாரில் ஒருவரையாவது எடுத்துக்காட்டினார்களில்லை.

தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முற்பட்டதென ஐயரவர்கள் தெளிவிக்குமுறையினைச் சிறிது நோக்குவோம். இக் கொள்கை, தமிழபிமானிகள்சிலரால் இக்காலத்து வெளியிடப்பட்டுவருகிறதெனினும், கர்ணபரம்பரையிற் கேட்கப்படும் வாலாற்றிற்கு விருத்தமாயுள்ளது. சிவஞானசுவாமிகள் தமது பாயிரவிருத்தியிற் 'பாணினீயமுதலிய வியாகரணங்களுமுளவாக ஐந்திர நிறைந்த தொல்காப்பியனென்று' பனம்பாரனர்கூறினமைக்குக் காரணந் தருகின்றார்கள். இதனல் தொல்காப்பியனார்காலத்துப் பாணினீயம் உளதாதல் சுவாமிகளுக்கு உடன்பாடாம். வடமொழியிலக்கணத்தைப் பாணினியார்க்கு மேனாளுரைத்ததுபோலத் தமிழ்மொழியிலக்கணத்தை அகஸ்தியருக்கு உணர்த்தி வடமொழியோடு தமிழைச் சமமாக்கியருளினார் சிவபெருமானென்பர் பரஞ்சோதிமுனிவரும். இதனல் அகத்தியத்திற்குமுற்பட்டே பாணினீயமுளதாதல் முனிவருக்குக் கருத்தாகும். கர்ணபரம்பரையாகவேனும் கொள்ளத்தக்க இவ்வாலாற்றையொழித்துத் தமது நூதன கொள்கையை அங்கீகாரஞ்செய்தற்கு இரண்டு காரணங்கள் தருகின்றார்கள். அவற்றுள் ஒன்று மிகவும் புதுமைவாய்ந்தது. 'இலக்கண ஆராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதாய சொல்வாலாற்றுமுறையை'த் தொல்காப்பியர் கூறவில்லை; ஆகவே அம்முறையைக் கூறியுள்ள பாணினிக்கு 400 வருடங்கட்கு அவர் முற்பட்டவராதல்வேண்டும்: என்பதுதான் அக்காரணம். இதன் வன்மை மென்மைகளை யாராய்தல் அநாவசியகம்; இதுபோன்ற காரணங்கூறித் தமிழுலகை அவமதியாதிருக்கும்படி ஐயரவர்களைப் பிரார்த்திக்கிறேன். அவர்கள்கூறுவது தொல்காப்பியம் ஒரு நிரம்பிய இலக்கணமன்று எனக் கொள்ளுதற்குத் தக்ககாரணமாகலாம். வேறொருமுடிபும் அதினின்றுபெறுதல் ஏலாது. 'முற்றத்துறந்து முழுத்தவம் எய்தி முழுமுதலறிவினராய் விளங்கியவ'ரெனத் தொல்காப்பியரை யோரிடத்துக்கூறிப் பிறிதோரிடத்துச் சொல்வாலாற்றுமுறையைப் பாணினியாலன்றிப் பிறவாறு அறிந்து கூறமாட்டாதவராயினரென்று பெறவைத்தல் பரஸ்பரவிரோதமென்றுகூட ஐயரவர்கள் உணரவில்லை. இவ் அரிய காரணங்கொண்டு பாணினீயத்திற்கு முற்பட்டது தொல்காப்பியமெனத் துணிந்து, பாணினியின்காலத்தை ஆராய்ச்சியால் வரையறுத்து, தொல்காப்பியர் இற்றைக்கு 3200 வருஷங்கட்குமுன் புள்ளவர் என முடிக்கின்றார்கள். ஐயரவர்களது இரண்டாவது

காரணம் இன்னும் 1100 வருஷங்களுக்குமுன்பாகத் தொல்காப்பியரைக் கொண்டுசெல்ல உதவுகின்றது. தொல்காப்பியர்காலத்தே குமரியாறுண்மையும், அது கடல்கோட்பட்டகாலம் இற்றைக்கு 4300 வருஷங்கட்கு முன்னென்பது பௌத்த வம்சாவளியால் தெரிகின்றமையும், அக்காலம் பைபிளிற் கூறப்படும் 'நோவா' என்பவர்காலத்தோடு ஒத்திருக்கின்றமையும், ஆகவே தொல்காப்பியனார்காலம் 4300 வருஷங்கட்குமுன் னென்று தெளியப்படுகின்றமையும் அவர்களால் விரித்துரைக்கப்படுகின்றன. தமதுகொள்கைகளை எவ்வகையாலாயினும் நிறுவவேண்டுமென்று துணிந்து வெளிவந்திருக்கும் ஒருசிலர் காலவாராய்ச்சிசெய்யுமுறையை இது நன்கு உதகரிக்கின்றது. மேலைக் காரணத்தில் அமைந்த தொடர்களுள் ஒவ்வொன்றும் சந்தேக ஆஸ்பதமாயுள்ளதாகும். முதலாவதாக, தொல்காப்பியர்காலத்தே குமரியாறு இருந்தமை நிச்சயித்தல் ஏலாது. 'குமரி' யென்றே கூறப்பட்டுளது; 'ஆறு' என்றேனும் 'மலை'யென்றேனும் அன்றி 'முனை' யென்றேனும், தொல்காப்பியநூல்கொண்டு அறிதற்கில்லை. இப்பொழுதும் இந்தியாவின் தெற்குக்கோடி 'குமரி' யென்னும் பெயரால் வழங்குகின்றது. பனம்பாரனார் இத் தெற்குக் கோடியினையே கருதியிருத்தலுங்கூடும். இரண்டாவதாக, அவ் யாறுண்டிருந்ததெனக் கொண்டவிடத்தும் அது கடல்கோட்பட்டகாலம் நிர்ணயித்தல்கூடாது. வம்சாவளிகளில் அநேக கடல்கோள்கள் கூறப்படுகின்றன. எக்காலத்து நிகழ்ந்த கடல்கோளாற் குமரியாறு கடல்வாய்ப்பட்டதென்று அறிதல் ஏலாது. 4300 வருஷங்கட்குமுன் நேர்ந்ததொரு கடல்கோளால் அங்ஙனமாயிற்றென ஐயனாரவர்கள் கருதுகின்றார்கள். இது பொருந்தாது; ஏனெனின் அக்கடல்கோளால்தான் சிங்களம் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டதாக இலங்கைச் சரித்திரங்கள் உணர்த்துகின்றன. சிங்களம் இந்தியாவோடு சேர்ந்திருந்தகாலத்தில் இயற்றப்பட்டதெனத் தமிழ்நூல்களுள் எதனையுஞ் சொல்லுதற்கு ஆதாரமேயில்லை. மூன்றாவதாக, மேற்கூறிய கடல்கோள் நோவாவின்காலத்து நிகழ்ந்ததெனப் பைபிள்தெரிவிக்கும் பிரளயமாதல்வேண்டுமென்று ஐயனாரவர்கள் கருதுகின்றார்கள்! தமது அன்பிற்குப்பாத்திரனான நோவாவும் அவனாற் பாதுகாக்கப்பட்ட உயிர்களும்தவிர, உலகத்திலுள்ள மற்றையுயிர்களனைத்தையும் ஒருசேர அழிக்கக்கருதிக் கடவுள் நாற்பதுநாள் இரவும் பகலும் இடைவிடாது

மழைபெய்வித்துப் பிரளயம்நிகழ்வித்தார் என்னும் பைபிள் கதைக்கும் இலங்கைச் சரித்திரங்கள் கூறும் கடல்கோளுக்கும் யாது சம்பந்தம்! ஒரு விஷயத்திலேனும் பொருந்தக் காணவில்லையே! ஈரிடத்துங்கூறப் படுஞ் செய்திகளிற்போலும் ஒற்றுமையில்லையே! பைபிளிற் காணும் பிரளயம் சரித்திர விஷயமாகக் கொள்ளுதற்குரியதன்று; சரித்திரவிஷய மெனக்கொண்டவிடத்தும் மக்கள்வாழ்க்கைச்சரித்திரத்தில் எப்போ தென்று கணித்தற்கரிய புராதனகாலத்தில் ஒரு ஜலப்பிரளயம் நேர்ந்த தென்றதற்கு அறிகுறியாகக் கொள்ளலாமேயன்றிப் பிறவாறு அதனைக் கொள்ளுதற் கில்லை. இப்பிரளயம் நிகழ்ந்தகாலமும் பைபிளைக்கொண்டு நிச்சயித்த லரிது. பலர் பலவாறு கணக்கிட்டுக் கூறுகின்றனர். ஒரு கணக்கில் கி. மு. 2105-ல் அது நிகழ்ந்ததென்று கூறப்படுகின்றது; வேறொருகணக்கில் கி. மு. 3153-ல் என்று எழுதப்படுகின்றது. நிச்சய மென்பது சிறிதுமில்லாத இவ்விஷயத்தில் ஒன்றுந் துணிதற் கிடமே யில்லை.

இங்ஙனமாக எங்குநோக்கினும் சந்தேகமயமாயுள்ள சில போலிக் காரணங்களைச் சரித்திர ஆதாரமுள்ளனபோல எடுத்துக்காட்டிக் கர்ண பரம்பரையிற் கேட்கப்படும் வரலாற்றினை ஐயரவர்கள் அநாதரவுசெய் கின்றார்கள். வரலாற்றுமுறையை மறுக்கும்விதம் இவ்வாறாயிற்று. தொல்காப்பியத்தின்கண், பாணினியாரது கருத்துக்கள் சில காணப்படு தற்கு இரண்டு உதாரணங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. அவற்றை மறுத்து யாதொன்றுங் கூறினார்களில்லையென்பது செந்தமிழ்நேயர்கள் சிந்திக்கற்பாலது.

இதனையடுத்து, சிவஞானசுவாமிகள் 'வடமொழியுணர்ந்தார்க்கன் றித் தமிழியல்பு விளங்காது' என்றுகூறியதனைப்பற்றி ஐயரவர்கள் எழுதுவனவற்றை நோக்குவோம். அவ் வாக்கியத்தின்பொருளை 2 பக் கங்களில் (415-416) விளக்குகின்றார்கள். பொருள்விளக்கமொன்று எழுதும் ஆவசியகந்தான் உண்டோவெனப் பலரும் ஐயுறுதற்கு நியாயம் உளது. சுவாமிகள் தமது ஆராய்ச்சித்திறத்தாலும் கருத்துக்கள் தெளிவுபெறநிகழ்கின்ற இயல்பாலும், நிரம்பியசொல்வன்மையாலும், யாண்டும் பொருண்மயக்கஇடமின்றி நயம்பட எழுதுந்தன்மையாளர். இவ்வியல்பிற்கேற்கவே ஈண்டும் வாக்கியம் தெளிவாக அமைந்திருக்கின்

றது. எனினும் அது பிழைபடவுணரப்படுகின்றது. 'பாணினீயம் முதலிய வடமொழிவியாகரணங்களுக்கில்லாதசிறப்புத் தமிழிற்குப் பெரிதும் உண்'டாதலாலே 'தெய்வச்செந்தமிழின் றொன்மையும் பெருமையும் உணர்ந்து இன்பமுறல்வேண்டுவார்க்கு வடமொழிப்பயில்வும்வேண்டப்படுவ தொருதலையா'மென்று காரணங்காட்டி, இக்காரணம்பற்றியே சுவாமிகள் மேற்குறித்தவாக்கியத்தை எழுதியுள்ளார்கள் என்பதேதான் ஐயனாரவர்களது விளக்கப்பொருள். ஆனால், வாக்கியத்திற்குநேரே முந்தியிருக்குந்தொடர் இவ்விளக்கவுரை பிழையென்பதைத் தெளிவாகக்காட்டுகின்றது. 'யாங் கூறியதே வடநூலார்க்கும் உடன்பாடாதல் மாபாடியம் வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்பதே அத்தொடர். இதனால் தாம் கூறியதற்கு ஆதாரமாக வடநூற்கருத்துக்களைத் தருகின்றாரென்பது புலனும். சுவாமிகளது முதற்சூத்திரவிருத்தியிற் பலவிடங்களிலும் இங்ஙனம் ஆதாரங்காட்டுதலைக் காணலாம். தமிழிலக்கணவுணர்ச்சிக்கு வடநூல்வியாகரணங்கள் பெரிதும் பயன்படுவனவாமென்பதே அவர்களது கொள்கை. ஆனதுபற்றியே தமிழ்நூலொன்றேவல்ல உரையாசிரியர் முதலியோரைச் சிறிது கடிந்துரைத்தும் இருமொழியினும்வல்ல சேனாவரையரைப் புகழ்ந்துரைத்தும் செல்வர். உதாரணம் முதற்சூத்திரவிருத்தியில், 26-ம் பக்கத்திற் காண்க. ஆகவே, 'சிறப்பில்லா மொழியொன்றினையறிந்தவர்க்கே சிறப்புடைய பிறிதொருமொழியின் பெருமையுணரலாகும்: என்ற வேற்றுமைநயம்பற்றியன்று சுவாமிகள் மேலைவாக்கியம் எழுதியது. இவ்வுண்மையை 'யோகிகளியற்றிய நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்று ஐயனாரவர்கள் எழுதிய வாக்கியங்கொண்டே அவர்களுக்குப் புலப்படுத்த நேர்ந்தமைக்குப் பெரிதும் மனம் உளைகின்றேன். முடிவில் 'உலகியற்பொருளறிவும் பிறவும் கைவந்தவர்க்குத் தமிழுணர்வொன்றுமே போதாது, வடநூலுணர்வும் வேண்டப்படும் என்பது சிவஞானசுவாமிகளுக்கும் கருத்தாகும்' என்று யான் நினைப்பதாக எழுதியிருக்கிறார்கள். யான் ஓரிடத்தும் இங்ஙனம் எழுதியதில்லை. அன்றியும், இத்தொடர் பலபொருள்களையுட்கொண்டதாகவும் மிகப் பொதுவாகவும் உள்ளது; பொருள் நிச்சயமில்லா இவ்வாக்கியத்தையெழுத எவருந் துணியமாட்டார்கள். வேறொருவிஷயமும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சுவாமிகள் 'ஒன்றுபற்றியொரோவிடத்துக்கூறியதுகொண்டு பிள்ளையவர்கள் வடநூல்வழி இயது

தமிழ்நூலெனக் குறித்தார்கள்' என்று ஐயனாரவர்களால் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்தும் எனக்குப் புதுமையேயாகும். வடநூல் வழிவித் தமிழ்நூலாயிற்றென்பதிற் பொருள் யாதும் இல்லை; அர்த்தமில்லாத தொடர்களையும் யான்கூறுதனவற்றையும் என்பாற்படுத்துவது ஐயனாரவர்களுக்குத் தகாது. வடநூல்வழியது தமிழ்நூலென்பது அவர்கள் கூறக்கருதியதாயின், அவ்வகையும் யான் ஓரிடத்தும் எழுதியதில்லை.

இதுகாறும், எனது முடிபிற்கு ஏதுவாதலின்றி எனதுகருத்துக்களில் இரண்டினை ஆதரிப்பனவாக யான்தந்த இருவாது கூற்றுக்களையும், எனக்கு உடன்பாடன்றெனினும் அபிப்பிராயம் இத்துணைசென்றுளது எனக்காட்டற்குமாத்திரம் யான்கூறிவிடுத்த தீக்ஷிதரது கொள்கையினையும், ஐயனாரவர்கள் ஆராய்ந்துமுடித்த பரிசு இவ்விதமென வுணர்த்தினேன். இனி, யான்தந்த ஏதுக்கள் மூன்றனுள், தருக்கித்தற்கென அவர்கள் எடுத்துக்கொண்ட இரண்டனையும் எவ்வாறு ஆராய்ந்திருக்கிறார்களென நோக்குதல்வேண்டும். முதலாவதாக, தமிழிலுள்ள சொற்களில் ஒருபெரும்பகுதி வடமொழிப்பதங்களாமென்றேன். இதனை 4-பக்கத்தில் (398-401) விசாரணை செய்கின்றார்கள். ஆனால் வடமொழியினின்றும் பிறந்ததே தமிழ் என்று யான் கருதுவதாகக் கூறிக்கொண்டு அதனையே மறுக்கிறார்கள்! ஓரிடத்தும் யான் தந்த கருத்து மறுக்கப்படவேயில்லை. எனதுமுடிபினையே அவர்களும் வலியுறுத்துகின்றார்கள். சங்கச்செந்தமிழ்நூல்களில் ஆரியச்சொற்கள் காணப்படுதலும் அவை பிற்றைஞான்றைத் தமிழ்நூல்களிற் பெருவரவினவா யுண்மையும் அவர்களுக்கும் உடன்பாடே. ஆனால் ஆரியருந் தமிழ்மக்களும் 'நெருங்கிவாழாது வேறாயிருந்தகாலத்தே எழுதப்பட்டநூல்களில் விரவிய சொல்வழக்குக் காணப்படுதல் சிறிதும் இல்லையென்க' என்றுமட்டுஞ் சேர்த்திருக்கின்றார்கள். இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலெனக்கூறப்பட்டுள்ள தொல்காப்பியத்தின்கண்ணே, செய்யுளீட்டச் சொல்வகைகளுள்ளே, வடசொல்லும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. 'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொலென்—றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே' என்பது தொல்காப்பியம். ஆகவே இடைச்சங்கநூல்களிலும், கடைச்சங்கநூல்களிலும் வடசொற்கள் பயின்றிருக்

தமை தெளியலாகும். முதற்சங்கத்தார துநூலென அகத்தியம் கூறப் பட்டிருக்கின்றது. 'பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே—அடிசில் பொத்தகம் சேனை யமைந்த—கதவ மாலை கம்பல மனைய' என்றது அகத்தியச் சூத்திரமாகப் பழைய வுரைகாரர்களால் தரப்பட்டிருக்கின்றது. இச்சூத்திரத்தினுள்ளே வடசொற்கள் பயின்றுவந்திருத்தல் காணலாம். எனவே முதற்சங்கத்து நூலினும் வடசொற்கள் ஆளப்பட்டுள்ளமை விளங்கும். முதற்சங்ககாலத்துக்குமுன் தமிழ்நூல்கள் இருந்தனவாகக் கூறுதற்கு ஆதாரமில்லை. ஆரியரோடு விரவாதகாலத்துத் தமிழ்மக்களிடையே நூல்க ளிருந்தனவெனற்கும் ஆதாரமில்லை. நூல்களிருந்தன வென்றுகொண்டவிடத்தும் அவற்றைப்பற்றி யொன்றும் கூற ஏலாது. இக்காரணங்களால் ஐயஙாரவர்கள் சேர்த்தெழுதியிருப்பது பொருந்தாது.

எனது ஹேதுக்களி லிரண்டாவதாக, 'நூற்குரியவிஷயங்களெனத் தமிழில் எடுத்தாளப்பட்டவற்றுள், பெரும்பாலன வடமொழிநூல்விஷயங்களாம்' என்று யான்கூறியதனை 5 பக்கங்களில் (407–411) மறுத்தெழுதுகின்றார்கள். ஐயஙாரவர்கள் மறுக்கும் முறையை இப்பகுதி நன்கு விளக்குகின்றது. யான் தந்துள்ள ஹேது அவர்களாற் கீழ் வரும் ரூபத்தில் தரப்படுகின்றது:—

'செந்தமிழ்நல்லிசைப்புலவர் நூற்குரியபொருள்களெனக்கொண்டு உரைத்தவெல்லாம் வடமொழிநூற்குரிய பொருள்களாமன்றித் தனித் தமிழ்க்கென ஒருபொருள் ஏற்பாடு இல்லை.'

இதற்கும் யான்கூறியதற்கும் பெரிதும் வேறுபாடு உளது. பெரும்பாலன வடமொழிநூல்விஷயங்களா மென்றேன்; அவர்கள் எல்லாம் வடநூற்குரியபொருள்களாம்' என்று தமக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டார்கள். இவ்வாறு மாற்றியது கைப்பிசகுமன்று. வேண்டுமென்றே மனமாரக்கருதிக்கொள்ளப்பட்டதாமெனல் 'தனித்தமிழ்க்கென ஒரு பொருளேற்பாடு இல்லை'யென்று எதிர்மறைமுகத்தானும் அவர்கள்

கூறுதலால் விளங்கும். யான் கூறுததனையும் கருதாதனையும் கூட்டி யமைத்துக்கொண்டதனோடு அவர்கள் நிற்கவில்லை. தமிழ்க்கெனவுரிய பொருள் ஏற்பாட்டினைப்பற்றி விரிவாய் ஆராய்கின்றார்கள்! பொருட்பாகு பாட்டினைப்பற்றி யான் யாதும் கூறவில்லை. நூற்குரிய விஷயமென்றத னால் யான் கருதியதுவேறு; ஐயனாரவர்கள்கொண்ட பொருட்பாகுபாடு வேறு. இங்ஙனம் எனது முக்கியமானகருத்தினையும் திரித்துணர்ந்து கொள்கின்றார்கள். இத்திரிபுணர்ச்சி எனது முதல் உதாரணமாகிய திருக்குறளைநோக்கிப் பிறந்ததாகும். யான் காட்டிய இரண்டொரு உதாரணங்களை யொருவகையான் மறுத்துவிட்டால், பலவுதாரணங்களி னின்றும் திரட்டப்பெற்ற வொருமுடிபு மறுக்கப்பட்டதாகுமென நினைத்தார்கள்போலும்! முதலுதாரணமாகிய திருக்குறளை எடுத்துக் கொண்டு அதன்கண் தமிழ்நூற்குரிய பொருட்பாகுபாடே காணப்படு வது என நிறுவமுயல்கின்றார்கள். நிறுவுமுறை வருமாறு:—

1. அகம் புறம் என்றது தமிழ்ப்பாகுபாடு: இது தொகை.
2. அறம் பொருள் இன்பம் வீடு என்பது மேலதன் விரி.
3. இங்ஙனம் விரித்தும் தொகுத்தும் கூறும் மரபு தனித் தமிழிற்கே உரியது.
4. அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ்மரபிற்கே உரியது.
5. வள்ளுவர் வீடுங் கூறியுள்ளார்; நாற்பொருட்பாகுபாட் டினை முற்றும் எடுத்தாளுகின்றனர்.

ஆதலின் வள்ளுவர்கொண்டது தமிழ்நூற்குரிய பாகுபாடே. இவற்றுள் முதற்கூற்றொழிய ஏனையவெல்லாம் பிழைபாகும். அகம் புறம்: என்ற தமிழ்ப்பாகுபாட்டால், திருக்குறள்விஷயத்தை விளக்கு தற்கு ஏலாது. ஆனதுபற்றி அறமுதலிய பாகுபாடு தமிழ்க்குரியதே

யென நிறுவப் பெரிதும் முயல்கின்றார்கள். அகம் புறம்: என்ற தொகையின் விரியே அறமுதலிய நான்கும் என்றார்கள். இருவகைப் பாகுபாடும் வேறுவேறு நோக்கம்பற்றியும் நியாயம் பற்றியும் எழுந்துள் ளனவாதலின் ஒன்றினைத் தொகையென்றும் மற்றதனை அதன் விரி யென்றும் கூறுதல் சிறிதும் பொருந்தாது. விரித்தும் தொகுத்துங் கூறும் மாபு தனித்தமிழிற்கே உரியதென்றார்கள். இவ்வாறுகூற ஐயன ரவர்கள் துணிந்தமைக்குப் பெரிதும் ஆச்சரியமடைகின்றேன்! இது தமிழர்க்கன்றி வடமொழிவாணர்க்கு அறிவென்பதே இல்லை யென்று கூறுவதனையொக்கும்! முதல் அத்யாயத்தில் கௌடில்யர் தமது நூற் கருத்தைத் தொகுத்துக்கூறிப் பின் முறைப்பட விரித்துச்செல்கின்றார். இஃதொன்றே அவர்கள் கூறியது தவறெனக்காட்டற்குப் போதியது. அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ்மரபிற்கேயுரியதென் றார்கள். வடமொழியில் அறமுதலிய நான்கும் 'சதுர்வர்க்கம்' என்ற சங்கேதத்தால் வழங்குதல் பிரசித்தம். 'சதுர்வர்க்கபலம் ஜ்ஞானம்' என்பது ரகுவம்சம் (X-22). 'த்ரிவர்க்கோ தர்ம காமார்த்தை: சதுர் வர்க்க: ஸமோக்ஷகை:' என்பது அமரம். கௌடில்யரும் காமந்தகரும் 'த்ரிவர்க்கம்' 'சதுர்வர்க்கம்' என்பவற்றைப்பற்றிக் கூறுகின்றார்கள். ஐயனாவர்களும் 'பொருள்கள் உலகவழக்கானும் வேதவழக்கானும் அறமுதலியவாக விரித்துக்கூறப்படும்' எனத் தம்மையறியாமல் இலக் கணவிளக்கத்திலிருந்து எடுத்தெழுதிவிட்டார்கள். ஆகவே இக்கூற் றும் பிழையாம். வள்ளுவர் வீடுங்கூறியுள்ளார் என்றார்கள். முப்பாலாக வெளிப்பட வகுத்துக்கூறிய நாயனாரை வீடுங்கூறினாரென்றல் எங்ஙனம் பொருந்தும்? திருக்குறளுக்கு 'முப்பால்' எனவொரு பெயருமுள தன்றோ? புருஷார்த்தம் நான்குங்கூறினாரெனவுரைத்திருப்பதெல்லாம் உபசாரமாத்திரையே யென் றறியத்தக்கது. வீடுங்கூறினா ரென்று கொண்டவிடத்தும் எனது உதாரணம் பாதிக்கப்படுமாறில்லை: அறம்

பொருளின்பம் வீடென்னும் பாகுபாடு தமிழ்க்குரியதன்று என்பது சித்தாந்தமாகலின்.

முதலுதாரணம்பற்றிய ஆராய்ச்சியை யிங்ஙனமுடித்து இரண்டாவது உதாரணமாகிய இராமாயணத்தையெடுக்கிறார்கள். 'கம்பநாடர் வான்மீகிராமாயணத்தைப் படியெடுத்துக் காதைகள் முறைபிறழாமற் செய்தார்' என்பதே அவர்கள் கூறுவது. இராமசரிதமாகியவிஷயத்தை யெடுத்துக்கொண்டது மாத்திரமன்றிக் கதையினை விரித்துரைக்குமுறை யின்கண்ணேயும் வான்மீகியாரைப் பின்பற்றினர் கம்பர் என்பது அவர்கள் கருத்தாகமுடிகின்றது. ஆகவே இவ்வுதாரணமும் பிழையெனக் காட்டப்படவில்லை.

இவ்வாறாக, எனதுமுன்னுரையின் பிரதானமுடிபினைக் கைநெகிழவிட்டு, என்னையும் எனதுகருத்துக்களை யாதரித்துரைத்த ஆசிரியரிருவரையும் மயங்கியுணர்ந்துகொண்டு, யான்தந்த ஹேதுக்களைச் சரிவா அறிந்துகொள்ளாது, அவற்றைக் கண்டித்துக்கூறுவார்போன்று சிலசில எழுதி, இராஜையனாரவர்கள் மறுப்புரையொன்று வெளியிட்டிருக்கின்றார்கள். தமிழுக்கு வடமொழி செவிலித்தாய்நிலையில் உதவிவந்திருக்கிறதென்றமுடிபு அணுத்துணையும் மறுக்கப்படவில்லை. தமிழ்த்தாய் மீதுள்ள பக்திவிஷயத்தில் ஐயனாரவர்களுக்கு யான் சிறிதும்பிற்பட்டவனல்லனென்பதைமாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்து எனது எதிருரையை முடிக்கின்றேன்.

S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L.,

திருவநந்தபுரம்.

உ

* கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உரையுடன்)

முன்னுரை.

கம்பராமாயணத்தின் பெருமையை அறியாத தமிழர் இல்லை. அதனில் அடங்கியுள்ள மிக்க அருமையும் இனிமையும் வாய்ந்த கருத்துக்களை அறிந்து ஆனந்திக்கும் பயன்பெறவே, தமிழரல்லாதாரும் தமிழைக் கற்கவேண்டுமென்பது மிகையாகாது.

இவ்வாறு அந்நியபாஷையில் உள்ள இலக்கியங்கள் தம்பாஷையிலே மொழிபெயர்க்கப்பட்டவற்றைப் படித்தமட்டிலே திருப்தியடையாமல், அவ்விலக்கியங்களை நேராக அறிந்து ஆனந்திக்கவிரும்பி, அவைகள் உள்ள மூலபாஷைகளைக் கற்றுத்தேறிய அருங்கலைவிநோதர் அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உளர். நாகரிகமடைந்த மற்றைத் தேசங்களிலும் அத்தகையார் சிலர் இருக்கின்றனர்.

இவ்வுலகத்துச் செல்வமெல்லாவற்றையும் ஒருங்கே அடைந்து சகலபோகங்களையும் ஆசைதீர அநுபவிக்கும் ராசபதவியேயன்றி, எல்லா வகையிலும் அவ் விராசபதவியினுஞ் சிறந்த தேவேந்திர பதவியும் கூடக் கம்பராமாயணம் போலக் கற்றோர்க்கு மனக்களிப்பைத் தரமாட்டாது என்னும் கருத்துப் புலப்பட "இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம் எய்தி அரசாண்டிருந்தாலும்—உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஓங்கும் நீழல் இருந்தாலும்—செம்பொன் மேரு அனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையில்—கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்(கு) இதயம் களியாதே" என்று கற்றார் ஒருவர் மனம் கனிந்து கூறியது உபசாரமன்று, உண்மையேயாமெனக் கற்றாரனைவரும் ஒப்புக்கொள்வர்.

உலகத்திலே உள்ள பலபாஷைகளிலும் வழங்கும் காவியங்களிலே சிறந்தது வான்மீகிராமாயணம் என்பர். வான்மீகி முனிவரது "உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் இ(து) உணர்த்திய"தென்று கம்பர்

* All rights reserved by the Author.

வான்மீகத்தின் வழிநூலாக இயற்றிய ராமாயணம் அழகிலேயன்றி *அளவிலும் வான்மீகத்திலும் சிறந்து விளங்குகின்றதென்று இரண்டு நூல்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்தோர்சிலர் கூறுவர். இதனை வட மொழி தென்மொழி இரண்டினும் வல்லார் எல்லாரும் ஒப்புக்கொள்ளி னும், வான்மீகத்துக்கு இழுக்கு இன்று; பெருமையுடைத்தாயிற்று. தந்தையினும் மகன் சிறப்புடையனாதல், தந்தையின் சிறப்பைக் குறை யாது (அத்தகைய புத்திரனுக்குப் பிதாவாம் பெருமையால்) அதிகப் படுத்துவதாமாதலால் தந்தையின்றேல், மகன் இன்மைபோல, வான்மீக மின்றேல், கம்பராமாயணமு மின்றாம். தக்கவன் ஒருவன் அடைந்த பிதிரார்ச்சிதச் சொத்து, அவனாற் கழித்தற்பாலன கழிக்கப்பட்டுச் சீர்திருத்தற்குரியன சீர்திருத்தப்பெற்று, நூதனமாகச் சேர்க்கத் தக்கன சேர்ப்புண்டு, எல்லாவகைகளிலும் மேன்மையுற்றுவிளங்கு வதுபோல, முதல்நூலாகிய வான்மீகத்தினும் வழிநூலாகிய கம்ப ராமாயணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாறு கூட்டவும் குறைக்க வும் மாற்றவும்பெற்றபகுதிகளிலே சில, நூலினிமையை அதிகப்படுத்து வனவாம்; வேறுசில, வான்மீகர்காலநாகரிகத்துக்கு இயைய அவர் கூறியவைகள் கம்பர்காலநாகரிகத்துக்கு ஏலாதனவானதனால், பிந்திய தற்குப் பொருத்தமாகச் செய்யப்பெற்றனவாம்.

தமிழிலே கம்பராமாயணம்போல, ஆங்கிலத்திலே சிறந்த பார காவியமாகிய சுவர்க்கநீக்கத்தை (Paradise lost) இயற்றிய மில்ட்ட னாது சரித்திரத்தை எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர், உலக இலக்கியக் காட்சிச்சாலை ஒன்று நியமித்து அச்சாலையில் ஒவ்வொரு மொழியாளரும் தத்தம் மொழியில் இவ்விரண்டு இலக்கியப் புத்தகங்களை கொண்டுவந்து வைக்கலாமென நிபந்தனை ஏற்படுத்தினால், ஆங்கிலேயர்கள், அங்கே, ஷேக்ஸ்பியரது புத்தகத்தையும் மில்ட்டனாது புத்தகத்தையுமே காட் சிப் பொருள்களாக வைப்பரென்றும், அவ்விரண்டுள் †ஷேக்ஸ்பியரை முதலாவதாகவும் †மில்ட்டனை இரண்டாவதாகவும் வைப்பரென்றும்

*வான்மீகம் இருபத்துநாலாயிரம் சுலோகங்களை உடையது; கம்பராமா யணம் பன்னீராயிரம் விருத்தங்கள் உள்ளது; ஆயினும் சுலோகங்களின் குறு மையையும் விருத்தங்களின் நெடுமையையும் நோக்கக் கம்பராமாயணமே அள விற் பெரிதாம்.

† ஆசிரியர் பெயர் நூலைக் குறித்தன, திருவள்ளுவர் என்பது போல.

கூறியுள்ளார். அப்படிப்பட்ட காட்சிச்சாலையில், தமிழ்மக்கள் கொண்டு வைத்தற்குரிய இரண்டு புத்தகங்கள் திருக்குறளும் ஸ்ரீமத் கம்பராமாயணமுமே யென்பதும், அவற்றுள் குறள் முதலாவதாகவும் கம்பராமாயணம் இரண்டாவதாகவும் வைத்தற்குரியன வென்பதும் தெளிவாம். கம்பரும் திருவள்ளுவருமே தமிழுக்குக் கதியென்பது, அவர்கள் பெயர்களில் உள்ள க. தி, என்ற முதலெழுத்துக்களா லாயதென்று ஒருவர் கூறியது மேற்கூறிய கருத்துக்கொண்டே.

கம்பர், ஏகம்பவாணமுதலியாரது புகழை வருணிக்குமிடத்து "வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாஎல்லை" என்றபடி, அவர் பாடிய ராமாயணச் சிறப்புக்கு எல்லை, அதனை எடுத்துரைப்போர் சொற்றிறத்தின் எல்லையே. அச் சிறப்பை உரைப்பவர் எத்துணைச் சொல்லாற்றலுடையாராயினும், அவர் அதனை உரைக்க உரைக்க, அது வளரா நின்று அவர் *"உரை குறுக நிமிர்"கின்ற இயல்புடையதாய் ஒருவராலும் முற்றக்கூற முடியாததாயுள்ளது. உலகத்துப் பெருமலைகளெல்லாவற்றினும் பெரிதாய்ப் பொன்மயமாய் ஒளிமிகுந்ததென்று விதந்து கூறப்பட்ட மேருமலைபோலத் தமிழ்ப்பெருங் காவியங்க ளெல்லாவற்றினும் பெரிதாய் ரசமாய் இனிமை மிகுந்தது கம்பராமாயணமேயாம். அதன் சிறப்பு இவ்வா றிருத்தலானன்றே, "கம்பர் கவிச்சக்கரவர்த்தி" யென்றும் "கல்வியிற் பெரியன் கம்பன்" என்றும் ஆன்றோர் நன்காராய்ந்து துணிந்து கூறினர்.

இவ்வளவு சிறப்புடையதாய் அரிய இனிய அறிவாகரமான கருத்துக்கள் நிரம்பிய கம்பராமாயணம் மற்றெந்தத் தமிழ்நூலினும் விரிவாயிருத்தலால், கற்றோருள்ளேயே மிகப்பலர் அதனை முழுதும் படியாராய் அதனிற் சிறந்த பகுதிகளென்று பிறர் சொல்லக் கேட்ட சிலபகுதிகளை மட்டும் படித்து விட்டுவிடுவதும், மேற்கொண்டு படித்தால், அப் பகுதிகளையே திரும்பத்திரும்பப் படிப்பதும் வழக்கமென்பது தெரிந்த விஷயம். ஆதலால், கம்பராமாயணத்தை விரிவஞ்சி முழுதும் படியாத கற்றோரும் மற்றோரும் அதன் இனிமையான பகுதிகள் முழுவதையும் கற்று அறிந்து ஆனந்தித்துப் பயனடையும்படி கருதிச் சேற்றூர்ச் சமஸ்தான வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள்

* குலமுறை கிளத்துபடலம் ச.

திருநெல்வேலி ஹிந்து கலாசாலைப் பிரதம தமிழ்ப்பண்டிதரும் சக்கரவர்த்தித் திருமகனார் நேராக அளித்த கில்லத்துப் பரிசு பெற்றவரும் ஆகிய மகா-ள-ள-ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் ஆகிய இவர்கள் உதவியுடன் ஆராய்ந்து என் சிற்றறிவுக்குப் பலவகையிலும் சிறந்தனவாகத் தோன்றிய பகுதிகளைத் தெரிந்தெடுத்துத் தொகுத்துக் "கம்பராமாயண இன்கவித் திரட்டு" என்று பெயரிட்டு வெளியிடலானேன். இத் திரட்டின் அளவு "நைடதம்" "பிரபுலிங்கலீலை" போன்ற காவியங்களின் அளவுக்கு அதிகமாயிராது.

தெய்வப் புலமைக் கம்பநாட்டாழ்வார் திருவுளமகிழ்ந்து திருவாய் மலர்ந்தருளிய கவிகள் யாவும் இனியவைகளே யன்றோ? அவ்வாறாக, அவற்றுள்ளே சிலவற்றைமட்டும் இன்கவிகளெனக் கொள்ளலாமோ எனில், கூறுகின்றேன். கம்பராமாயணப் பாட்டுக்களெல்லாம் சுவர்ணாபரணங்களென்னலாம். அவற்றுள்ளே பல, தனித் தங்க நகைகளெனவும், வேறுபல, ஒன்றும் பலவுமான இரத்தினங்கள் இழைத்த பொற்பூண்களெனவும் கூறலாம். பின்னையவற்றுள்ளே சில அருமையினும் அருமையான மதிப்பில் அடங்காத ஒளிமிகுந்த பெருமணிகள் இழைக்கப்பெற்றுப் பேரழகுடையனவாய்க் கழிபேருவகை விளைவிக்கும் கனகபூடணமென்று கழறலாம். அன்றியும், கம்பராமாயணம் முழுதும் தேம்பாகெனவும் அதனிற் காணப்படும் விசேட இனிமையுள்ள கவிகள், அப் பாகிலே விளைந்து திரண்ட கற்கண்டு மணிகளெனவுங் கூறலாம். ஆதலால் யான் தெரிந்தெடுத்துத் திரட்டிய கவிகள் மிக இனியவையென்று கொள்ளவேண்டுமேயன்றி மற்றைக்கவிகள் இனியவை அல்லனவெனக் கருதலாகாது. கற்பனை சமத்காரம் அலங்காரம் நவரசம் இவைகளில் ஒன்றோ பலவோ பொதிந்து மனத்தை மகிழ்விக்கும் கவித்துவ சத்தி மிக்க கவிகள், சிறந்தநீதி உயர்ந்தஞானம் முதிர்ந்த பத்தி பிரபலமான உலகவழக்கு இவைகளை இனிது போதிக்கும் கவிகள் என என் புல்லறிவுக்குத் தோன்றிய கவிகளை இத் திரட்டிலே சேர்த்திருக்கின்றேன்.

தனியாக நின்று இனிமைபயக்கும் கவிகளல்லாமல், அவ்வச் சந்தர்ப்பத்தில் தொகுதியாக நின்று இன்பம் விளைக்கும் தொடர்பான கவிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தனித்தும் தொடர்ந்தும்

இன்பம் தரும் கவிகள் இன்ன சந்தர்ப்பத்திற் கூறப்பட்டவைகளென்று தெரிந்தாலொழிய, அக்கவிகளின் பொருள்முழுதும் நன்கு புலப்படா தாதலால், தனிக்கவிகள் தொடர்கவிகள் என்ற இரண்டு இனத்துக்கு முன்னும் சந்தர்ப்பத்தை விளக்குதற்கு இன்றியமையாத அளவு சுருக்க மாகத் தலைப்புக்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பாட்டுக்களைப் பாட்டுக்களாக இசையோடு படித்தற்கு உதவியாகச் சீர்பிரித்தலும், பொருள் எளிதாக விளங்கும் பொருட்டுப் பாட்டிசைக் குப் பழுதின்றி, வேண்டுமிடத்துச் சந்திபிரித்தலேயன்றிச் சீர்களில் பதங்களுக்கு இடையே இடம் விடுதலும், நிறுத்தற்குறி வினுக்குறி வியப்புக்குறி முதலிய குறிகள் இடுதலும் செய்யப்பட்டிருக்கின்றன.

இத் திரட்டில் உள்ள கவிகளின் பொருளைச் செய்யுட் பயிற்சி மிக் காரேயன்றி அப்பயிற்சி சிறிதே உடையாரும் அஃது ஒன்றும் இல்லா தாரும் எளிதாக அறிந்து ஆனந்திக்கும்படி அவ்வப் பாட்டின்கீழ்க் கூடிய அளவு விளக்கமான பொழிப்புரை எழுதப்பட்டிருக்கின்றது. பாட்டின் முக்கியமானகருத்து நன்கு விளங்குதற்கு இடையூருய் அவ சியமில்லாத அடைமொழிகள் போன்ற பாட்டுப் பகுதிகளுக்கு உரை யெழுதாமல் விடப்பட்டும் பாட்டில் இல்லையாயினும் பொருள்விளக்கத் துக்கு அவசியமான சொற்கள் வருவிக்கப்பட்டும் இருக்கின்றன. வரு விக்கப்பட்ட சொற்கள் ( ) இவ் இருதலைப்பிறைக்குள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பொழிப்புரையின் கீழ் அரும்பதவுரையும், அதன்கீழ்ப் பொழிப்புரையில் அமையாத கவிநயங்களை விவரிக்கும் விசேடவுரையும் எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழில் வசனநூல்கள் மிகக் குறைவா யிருத்தலால், வசன ரூப மாக எத்தனை நூல்கள் எழுதினும் அத்தனையும் நன்கேற்றுக் கொள்ளப் படுமென்பது கருதியும், பாட்டுக்களைப் படித்து அவைகளின பொரு ளைத் தெரிந்துகொள்ளப் போதிய கல்விப்பயிற்சி யில்லாராயினும் வச னத்தில் உள்ள அதிநுணுக்கமான விஷயங்களையும் கிரகித்துக்கொள் ளத்தக்க மதிநுட்பமும் கவிக்கருத்துக்களை விளங்கக்கூறினல் அவற் றைக் கவிஞர்போலவே சுவைத்து ஆனந்திக்கும் ரச உணர்ச்சியு முள்ள விவேகிகள், கம்பராமாயணக் கருத்துக்களைச் செய்யுட்பயிற்சி மிக்கார்

கவிமூலமாக அறிந்து ஆநந்திப்பதுபோல, வசனவாயிலாகத் தெரிந்து இன்பம் அடையும்படி எண்ணியும், கதைச்சாரமும் கற்பனை வருணனை முதலிய நயங்களும் நன்குவிளங்கக் "கம்ப ராமாயண சார வசனம்" என்று பெயரிட்டு ஒரு நூல் எழுதி வருகின்றேன். அது பிரத்தியேக மாக வெளியிடப்படும்.

கம்பராமாயண இன்கவித் திரட்டிலே சேர்த்தற்குரிய சிலகவிகளின் நயம் எனக்குப் புலப்படாமையால், அவைகள் சேர்க்கப்படாமல் விட்டிருக்கலாம் ; அவ்வாறே சேர்த்தற்குரிய நயமில்லாதவைகள் சில,எனது பகுத்தறிவுக்குறைவாற் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

பொதுவாக எல்லா நூல்களும், விசேடமாகக் கம்பராமாயணம் போன்ற ஆழமுடைய நூல்களும் படிப்பவரது இயற்கைஅறிவு கல்வி கேள்விஅறிவு ஆராய்ச்சிஅறிவு அநுபவஅறிவு இவைகளுக்குத்தக்கவாறு பொருள் புலப்படுவனவாம். ஆதலால் யான் எழுதிய உரை, என் அறிவளவேயாய்ப் பல சிறந்த பொருள்களை விட்டிருத்தலும், அநேக பொருள்களைத் தப்பாகக் கொண்டிருத்தலும் இயல்பே.

ஆதலால், இத்திரட்டிலே தகுதியின்றிச் சேர்க்கப்பட்டிருக்கிற தனி இன்கவிகளும் தொடர்ச்சிப்பட்ட இன்கவிகளும் இவை இவை என்றும், தகுதியிருந்தும் சேர்க்கப்படாது விடப்பட்டவை தனிக்கவியினத்தில் இன்னவை இன்னவை, தொடர்கவியினத்தில் இன்னின்னவை என்றும் காரணத்தோடு காட்டியும், பொழிப்புரை அரும்பதஉரை விசேடவுரைகளில் உள்ள குற்றங்கள் இவை குறைகள் இவையென்று விளக்கியும் செந்தமிழ்வாயிலாகத் தயைசெய்து தெரிவிக்கும்படி அறிஞர் அனைவரையும் விநயத்துடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இத் திரட்டு, உரை, ஆகிய இவை சம்பந்தமாகப் பிறபத்திரிகைகளில் யாதாயினும் வெளியிடப்பட்டால், அதனை யான் அறிந்து பயனடையும்படி, அது தோன்றிய பத்திரிகைப் பிரதியைத் தயைசெய்து எனக்கு (வெள்ளக்கால், சுரண்டைப்போஸ்டு என்ற விலாசமிட்டு) அனுப்புதல் வேண்டும், அல்லது அப்பத்திரிகையின் பெயரும் அது வெளியிடப்பட்ட இடம் காலம் முதலிய விவரமும் தெரிவித்தல் வேண்டும்.

அறிஞர்கள் இந்நூல் விஷயமாகத் தெரிவிக்கும் சீர்திருத்தங்க ளெல்லாம், மிக்க நன்றியுணர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படுதலேயன்றி, நூல் புத்தகமாக வெளிவருங்கால், ஏற்றபெற்றி உபயோகித்துக்கொள் ளப்படும் பயப்பாடுடையனவாம்.

இத்திரட்டிலே சேர்க்கப்பட்டிருக்கிற பாட்டுக்களின் பாடபேதங் களைத் தெரிந்துகொள்வதற்கும், அப் பாட்டுக்களுக்கு உரையெழுதுதற் கும் பின்வரும் புத்தகங்கள் துணையாகவிருக்கின்றன. இவையன்றிக் கம்பராமாயண சம்பந்தமாகச் "செந்தமிழ்" முதலிய பத்திரிகைகளில் வெளிப்பட்ட வியாசங்களும் உபயோகமாக உள்ளன.

1. பாலகாண்டம்:—இராமசாமிநாயுடு உரையுடன் சர்வசித்து ஹு பதித்தது.

2. " அ. குமாரசுவாமிப்பிள்ளை, த. கனகசுந்தரம் பிள்ளை அரும்பதஉரையுடன் காலயுத்தி ஹு பதித்தது.

3. " வ. வெ. ஸுப்ரம்ஹண்ய ஐயர் அரும் பொருள்விளக்கத்துடன் 1917-ம் ஹு பதித்தது.

4. அயோத்தியா காண்டம்:— சேஷசாஸ்திரியார் உரையுடன் ஸர்வதாரி ஹு பதித்தது.

5. " சுப்பராயசெட்டியார் உரையுடன் 1904-ம் ஹு பதித்தது.

6. " சண்முகம்பிள்ளை உரையுடன் 1909-ம் ஹு பதித்தது.

7. ஆரணிய காண்டம்:— எம். ஆர். கந்தசாமிக்கவிராயர், எஸ். வெங் கட்டராயலு நாயுடு உரையுடன் 1900-ம் ஹு பதித்தது.

8. " வை. மு. சடகோபராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் உரையுடன் பிலவங்க ஹு பதித்தது.

9\. கிஷ்கிந்தா காண்டம்.— ஷை இருவரும் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும் உரையுடன் விரோதிகிருது ஞ பதித்தது.

10\. சுந்தரகாண்டம்:—வி. கோவிந்தபிள்ளை எழுதின உரையுடன் இராமாநுஜப்பிள்ளை விளம்பி ஞ பதித்தது.

11\. ஷை மூலம் கதைச்சுருக்கத்துடனும் ஆங்கிலமுகவுரையுடனும் ஸ்ரீரங்கம் வாணிவிலாச அச்சுக்கூடத்தில் 1907-ம் ஞ பதித்தது.

12\. கம்பராமாயண அருங்கவி விளக்கம்; கவித்தலம் துரைசாமி மூப்பனார் சர்வதாரி ஞ பதித்தது.

13\. எழுகாண்டமும் மூலம் மட்டும், அ. கந்தசாமிமுதலியார் தாது, இரத்தாட்சி வருஷங்களில் பதித்தது.

14\. ஷை ஷை அ. சுந்தரநாதம்பிள்ளை 1911-ம் ஞ பதித்தது.

15\. ஷை ஷை அ. இரங்கசாமி முதலியார் அன் சன்ஸ் 1914-ம் ஞ பதித்தது.

16\. வால்மீகி ராமாயண வசனம் (பண்டித நடேச சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு)

இந்நூலைச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிற் பிரசுரித்தற்கு அன்புகூர்ந்து அநுமதி அளித்த அப் பத்திராசிரியரவர்கட்கு எனது அத்தியந்த வந்தனங்க ளுரியன.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

புரூரவசரிதை.

(செந்தமிழ் 20-ம் தொகுதியின் சஅமெ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடமேற்றுபடலம்.

மைவார்நெடுங்கண்வணங்கார்நிணங்கமழுஞ்
செவ்வானவேற்கைத்திறலரசர்கோமானு
நைவானமைந்தர்களுநண்ணியவெங்கானகத்தி
லெவ்வாறேவின்னமியற்றும்வகையென்றிரங்கும். (1)

சீறடிகளெந்திடவுஞ்செல்லுவரோதீவெயிலிற்
றூறடிகடோறுமொதுங்குவரோதோட்டிநிகர்
கோறடியுமிந்தனங்கள்கூட்டுவரோமைந்தரென
நீறடியிலுற்றநெருப்பின்மெழுகாயுருகும். (2)

இத்தகையளாகிமுழுதின்னற்கடற்படியு
முத்தனையமுல்லைமுறுவற்கனியிதழ்வாய்ப்
பத்தினியாண்முன்னம்பதகரினும்பண்பறியா
வித்தவணிகன்றனித்தவணின்மேயினன். (3)

கற்புக்கணியைக்கமலத்திருக்கோயி
லற்புற்றமர்ந்தவணங்கினையஞ்சுகத்தைச்
சிற்பத்தொழிலுணர்ந்தோர்சித்திரத்துஞ்செய்யரிய
பொற்புக்கணிகலனைநோக்கியெவைபுகல்வான். (4)

பைந்தாதுகழ்ந்தளிகள்பண்பயிலுந்தண்பொகுட்டுச்
செந்தாமரையுனக்குச்செய்தகுறையுளவோ
கந்தாரம்வாய்ந்தகனிமொழியீரிங்கெனைநீர்
வந்தாளயான்புரிந்தமாதவத்தின்...றேயோ. (5)

அன்னச்சிறையுமழுந்தப்பொறுதபதஞ்
செந்நெற்புரளின்மிதிக்கச்சிவணியவோ

கன்னற்கனிமொழியீர்காந்தட்கரமலரு
மின்னற்படவுலக்கைதாங்குவதுமிவ்வாறே. (6)

முக்கணிறையைமுழுதுந்துணையானேன்
மிக்கவளமையினுமேலாஞ்சிறப்புடையேன்
றக்கமனையிடத்துச்சார்ந்துநிரப்பெனுமோர்
துக்கமொழியாததென்னையோதோகையீர். (7)

இப்பதியும்முடையவில்லன்றோவில்லிருந்தார்
செப்பரியவேவற்சிலதியர்நின்கீழன்றோ
ஒப்பரியவிந்திரற்குமில்லாச்சிறப்புமது
கைப்புருதப்பெற்றால்விலக்கல்கடனாமோ. (8)

மும்மையுலகமுழுதும்விலைகொளுமிச்
செம்மைமணித்திரளுமிக்கநிதித்திரளு
மும்முரிமையானுமடிமைக்குரித்தன்றோ
கொம்மைமுலைப்பசும்பொற்கொம்பனையகோதையீர். (9)

மந்தாநிலமுமலயத்திலகமும்வா
னிந்தானவெய்யோனெரிகதிரினீட்டமுஞ்
சிந்தாரந்தானுஞ்செழும்பூவணையுமழ
லுந்தாமனின்றாகுளிரவுமென்றுண்டாமோ. (10)

ஊட்டாவமுதக்கடலினிடையுதித்த
தாட்டாமரையிற்றிருவனையதாழ்குழலீர்
தோட்டாமலர்க்கணையாற்சுந்தரவேளென்னுயிரை
வீட்டாதவண்ணமருள்புரியவேண்டுமால். (11)

என்றாங்கியம்பவெரிபழுத்தவேலேபோற்
குன்றாதகற்பிற்குலமடந்தையஞ்செவியிற்
சென்றாழவுள்ளந்திகைத்தாள்செயலழிந்தாள்
நின்றாண்மரம்போலநின்றினையவெண்ணினாள். (12)

ஊரும்பதியுமுயர்ந்தவரசாளரசன்
பேரும்பிழைத்தென்வினைப்பயனின்பெற்றியாற்

கூருந்தழலனையகற்பினுக்குங்கோளுறுமேற்
றீருமருந்தென் னுயிர்கொடுத்து த்தீர்ப்பேனுல். (13)

காதற்புதல்வரொடுகோவலனுங்கானகத்திற்
போதப்புகுந்திவன்வாய்ப்புன்சொல்லுங்கேட்டேனே
? சாதக்கடவேனெனினுந்தருமமுமொன்
றேதக்கடந்தாலதுவுமுனுற்றுவனுல். (14)

என்னமனந்தேறியிருகண்பனிதூங்க
நன்னர்நெறியறியாநாய்கன்செவிதுளைப்பத்
தன்னினிகர்பிறிதொன்றில்லாத்தளிரியலாண்
முன்னம்வெறும்வெள்ளிடையைநோக்கியிவைமொழிவாள். (15)

வச்சியர்தங்கோவேமரபிழுக்காவல்லோனே
யச்சமறவெம்மைப்புறந்தவருளோனே
கொச்சைமதியினர்போற்கற்பிற்குலத்தியரை
நச்சுவதுமின்னுயிர்க்குநச்சாய்விளையுமால். (16)

அம்பலத்திலோர்துணையுமின்றியஞருறலுந்
தம்பமெனவைகுமிடந்தந்தளித்ததக்கோனே
நம்பியடைக்கலமாய்ப்புக்கோர்தமைநலிந்தால்
இம்பரிலும்மேலும்பழியன்றியெய்தாதால். (17)

வித்தாயகாமத்தாற்கன்னியரைமேவினரும்
வைத்தாரடைக்கலத்தைவஞ்சித்தவஞ்சகரும்
பித்தாலேகற்பிற்பிறர்மனையைவவ்வினரும்
புத்தாநரகிற்புழுவாய்க்கிரையாவார். (18)

ஆலத்தினுங்கொடியகற்பிற்கரசியர்தங்
கோலக்குவிமுலைகணோக்குங்கொடியோரைச்
சாலத்தருமபடர்தண்டனைசெய்தேவிழியி
னீலப்புழுவரிக்கவுய்ப்பார்நிரயத்தின். (19)

வழுவிலாக்கற்பின்மடமங்கைபர்கொங்கையிலே
யெழுதுபூணுகமுறவேறும்வெங்காமுகரை

யழலினால்வெந்தவயத்துண்டனையிறுகத்
தழுவுவாயென்றுநிரயத்திற்றள்ளுமறம். (20)

திறந்தெரிந்தகற்பினர்பாற்சிந்தைவைக்குந்தீயோரை
யிறந்தவரின்வேறாகவெண்ணாரியல்புடையோர்
பிறன்கடைநோக்காமையினுமுண்டோவறம்பிறபி
னறன்கடைநின்றாரினவரேகடையாவார். (21)

மட்டிழிந்தகூந்தன்மடமங்கையர்தங்காமத்தாற்
பட்டழிந்தார்வேலைமணலிற்பலராவார்
விட்டொழிதியன்றிவிரும்பிடினுன்வாழ்வனைத்துங்
கெட்டொழிவாயின்னகிளக்கலெனமொழிந்தாள். (22)

பாட்டிருந்தவண்டுபயின்றிருந்தபைங்கோதை
சூட்டிருந்தவன்னநடைத்தோகையுரைத்தவெலாங்
கேட்டிருந்துமெண்ணான்முன்கேட்டிருந்ததன்மையினால்
வாட்டிருந்துகண்ணாண்முன்பின்னும்வழங்குவான். (23)

அயிற்கதிர்வேற்கூர்வாளலகம்பணையவிழிக்
குயிற்குதலைச்செவ்வாய்க்குறுமுறுவற்கொம்மைமுலைப்
புயற்கரியகூந்தற்பொலன்கொடியீர்பூங்கணையா
லுயிர்க்கிறுதிவேலைதருமழுமொன்றுண்டாமோ. (24)

என்னீருரைத்தீரெனினுந்தமியேனைக்
கொன்னீர்ங்கணைமதனன்கொல்லாமற்காத்தீரே
னன்னீர்மைகாண்பீரதன்றியருணல்கீரேற்
பின்னீர்பெறுதல்பிழையாமெனப்புகன்றான். (25)

வாட்டுந்தழலிற்றளிரியலிவ்வன்கண்ணான்
ஈட்டுந்தருமமிழவானிவனிருந்த
வீட்டிலிருந்தேனைத்தீண்டவுயிர்வீடுவது
நாட்டும்பதிவிரதமன்றன்றெனநடந்தே. (26)

மைதீண்டும்வேற்கண்மழைதீண்டுங்காரோதிப்
பொய்தீண்டாவுள்ளப்பொலன்கொடியிப்புன்மையோன்
மெய்தீண்டிற்கற்பின்றழல்...............மவன்
கைதீண்டாவண்ணமரணமொன்றுகட்டுரைப்பாள். (27)

மாதவனே நின்னுழையில்வந்தேற்கொருபுலனும்
போதவுள தோவலேயிற்புக்கமான்போலன்றே
............நீயோர்வரமீந்தாயென்னின்மனக்
கேதமொழிவேன்யானென்றுளக்கேடில்லாள். (28)

பூவைமொழியின்னபுகலமனம்பூரித்தான்
றேவநிதியனையீரென்கொல்தெரித்திரென
தாவியெனினுமளியேன்றரற்பாலே
னீவிருரைமினிணையதெனநேர்ந்தனனால். (29)

நிரதம்வளமைக்கிளமைமிக்கநெடியோனே
புரதகனமூரற்பொருப்புச்சிலைப்புனித
வரதன்றுளோரேழ்வருடங்கருதும்
விரதமுளதனைக்காத்தருளவேண்டுமால். (30)

சாலினியாமின்னினையசாற்றத்தகையிழந்த
மாலினியநெஞ்ச...மதிமயங்கிமாழாந்து
மேலினியாமொன்றுவிளைத்துளேமென்னினுயிர்
போலினியாள்பொன்றுமெனதாவியும்பின்போகுமால். (31)

வலைந்தவலேப்புகுந்தமானென்றதுஞ்சரதம்
விலங்கியகலவொருவேற்றிடமும்பெற்றவரோ
வலங்கலயில்விழியார்தன்மையறிவோமெனவே
யிலங்குமணிவணிகனுள்ளமியைந்தனனால். (32)

சிந்தையியைந்தான்றிரும்பவுமாங்கொன்றுணர்ந்தான்
மைந்தரொடுங்கானில்விறகெடுக்குமற்றையவ
னிந்துநுதலியொடுமிவ்வூரிருக்கின்மத
னுந்துகணையாலென்னுயிருமிறக்குமால். (33)

தேடற்கரியவுயிர்தீங்குறுவதென்னிவளை
யோடத்திலேற்றியொருவாதுமாற்றரசர்
நாடுற்றிடுவனனுகவுமொண்ணுதிதற்கோர்
ஈடற்றசூழ்ச்சியினியென்கொலெனவெண்ணியே. (34)

உண்டு திபக்கருத்தென் றுன்னினுன்றன் னுழையிற்
பண்டேழ்முறையிற்பழகிப்பெறுங்கூலித்
தண்டேலங்குத்துந்தளிரியலார்யாருமரி
கொண்டேர்கடற்றுறையில்வம்பினெனக்கூறியே. (35)

அத்துறையினீரோடுமம்பியனைத்தினிலு
முத்துறழும்வாலரிசிமொய்குழலார்கொண்டேற்ற
வுய்த்துவிடுத்தனனவ்வோடத்தினேடரிக்கட்
பத்தினியைக்கொண்டுகடற்பாயெடுத்துப்போயினுன். (36)

வேறு.

வெய்யோன்விடும்வேலைமரக்கலமேன்
மையோதிவளைக்கைமடக்கொடிவீழ்ந்
தையோவெனவாக்கையுமாருயிரும்
பொய்யோவுறவென....புதுக்கினளால். (37)

நாவாய்கடற்போகநலிந்துயிரும்
போவாடுணைகண்டிலள்பொங்கழலின்
வேவாளெனமெய்பதறப்பதற
வாவாவெனநொந்தழும்வீழுமெழும். (38)

தக்கானெனவேதகவில்லவனிற்
புக்காதுபுறங்கொடுபோயிலமே
கைக்கார்முகமன்னவகண்மணிநேர்
மக்காளெனவேங்கிமபங்கிடுமால். (39)

சேணுடுமிருந்தசெழும்பதியு
நாணுளும்வழங்கியநன்னிதியுங்
கோணுவரசின்றிறனுங்குறுகிக்
காணுவிறையெவ்வுழிகாணுமெனும். (40)

இந்தக்கொடிதாமிடரிற்புகுதா
துந்தக்கடவேனுயிரைத்தமியேன்
சிந்தித்தயல்செலவிடமொன்றறியா
மைந்தர்க்குளர்யாரெனமாழ்குமனம். (41)

போர்வாளிறையோடுவனத்திடைபோய்
வேர்வாடியமெய்யொடுவெய்தின்வருஞ்
சோர்வாறிடவன்னையெனச்சுதர்வந்
தார்வான்முகநோக்குவரென்றயரும். (42)

கனிவாய்மழலைச்சுதர்கண்ணுறவோ
வனைவார்கழன்மன்னையெதிர்ந்திடவோ
வனையார்முகநோக்கிடவோவளியே
னெனதாருயிர்தாங்கியிருப்பதெனும். (43)

நெய்ப்பாமலருங்குளிர்வாசமுமொத்
தெய்யாதுதிளைத்திடுமின்பநலக்
கையார்கதிர்வேலிறைகண்டிலனே
லுய்யானினியானுயிருய்க்குமெனும். (44)

சுறவேகயலேசுரிசங்கினமே
சிறைவீசியெழுங்குருகின்றிரளே
யறைவாரிதியேயளியேனவல
மிறையேனுமொழிக்கிலிரோவெனுமால். (45)

கங்கைச்சடிலக்கருணைக்கடலே
செங்கட்கடலின்றிருமேனியனே
யெங்கட்கிறையென்றவிளங்குமர
ருங்கட்கபயம்மெனவொன்றுரையா. (46)

பஞ்சேறுபதத்திபயத்தினைவிட்
டுஞ்சேனெனவீயவொருப்படலு
மஞ்சேறுயர்வானிடைநின்றொருசொ
லஞ்சேலெனவஞ்செவியார்த்ததுவால். (47)

அகல்வானிடைநின்றசரீரிசொல
வுகுதாவுயிர்தாங்குமுடம்பினளாய்
மகர்காளெனதாருயிர்மன்னவனே
புகல்யாதுகொலென்றுபுழுக்கமுழா. (48)

பாகொத்தமொழிக்கிளிபூவைபசுந்
தோகைப்பெடையன்னமெனுந்துணையாள்
வேகக்கடலம்பியின்மேலொருகட்
காகத்தையுமன்றுகடுத்தனளால். (49)

இத்தன்மையளேகுமாக்கலமேன்
முத்துந்துகடற்றிரைமோதுவபூங்
கொத்துண்குழலைக்கொடுபோகலெனக்
கைத்துன்றிமறித்தல்கடுத்திடுமால். (50)

கார்க்குன்றுகொடன்றுகடைந்துவளைப்
போர்க்குன்றனையான்கொடுபோகியவவ்
வார்க்குன்றமுலைத்திருமானுமெனப்
பார்க்கின்றனவொத்தனபாய்திரையே. (51)

முதிருந்திரைமோதியநுண்டுளிகள்
விதிர்கின்றவண்மெய்ந்நனிவீசுதல்விண்
டதிருங்கடலங்கையினிற்பனிநீர்
பிதிர்கொண்டெறிபெற்றிநிகர்த்திடுமால். (52)

இவ்வாறெறிவேலையினேகியகார்
மைவார்விழிமங்கைதவம்புரியப்
பொய்வாழ்வுறுபுன்மைமனத்தவனுஞ்
செய்....ரறியாது திகைத்தனனால். (53)

வேறு.

பாரக்கலத்தேற்றிப்பாவிகொடுபோகமனஞ்
சோர்வுற்றுடன்மையினைப்பின்னுந்தொகுத்திடுதுந்
தாருற்றதோளான்றனயரொடுமெவ்வனத்திற்
பேருற்றதன்மையினையிங்கெடுத்துப்பேசுவாம். (54)

ஓடமேற்றுபடலம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

உ

ஒரு வேண்டுகோள்.*

செந்தமிழபிமானிகளே ! தமிழ்நாட்டுச் செல்வர்களே !!

உலகம், பலதுறைகளிற் பலவிதமாக முற்போக்கையடைந்து போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொருதேசத்தாரும் தங்கள்தங்கள் முற்போக்கைநினைத்துப் பலவழிகளிலும் சீர்திருத்தம்பெற முயற்சிக்கிறார்கள். நம் இந்தியநாடும் அவ்விதமே செவ்விதாக முன்னுக்குவர முயலுகின்றது என்று சொல்லுகிறார்கள். அது எப்படியாயினும் ஆகுக. கூடியசீக்கிரத்தில், ஜனங்கள், தங்களுடையபாஷாபிவிருத்தியைக்கொண்டே, தங்கள் க்ஷேமலாபங்களைக்கருதும்படியானகாலம் வந்துவிடும். தமிழ்நாட்டுமக்கள் முன்வரிசையில்நிற்க விரும்புவார்களாயின், முன்போல வாளா களித்திருக்காமல், அசைவிலா ஊக்கமுடையராய்த் தாழாதுஞற்றுபவராய்த் தமது தமிழ்மொழியைப் பெரிதும் பரிபாலிக்கவேண்டும்.

ஜப்பானியர்கள் தற்கால நாகரிகசாஸ்திரவிஷயங்களையெல்லாம் ஜப்பானியபாஷையிலேயே ஆராய்ந்து எழுதுகிறார்கள். ஜெர்மானியர்கள், பிரஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்கள் தத்தமதுபாஷைமூலமாகவே தந்தந்தேசத்துச்சிறார்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் ஜெர்மனி அல்லது பிரான்சு முதலிய இடங்களுக்குக் கல்விபயிலச்சென்றால் அந்தந்தப்பாஷைகளைக்கற்றுத்தான், பிறகு அந்தந்தவிஷயங்களைக் கற்க யத்தனிக்கிறார்கள். ஆனால் நாம்மாத்திரம், ஆங்கிலநாட்டில் நம்காலைஎடுத்துவைக்காமலே, நம்மகத்திலேயே, பிறபாஷைமூலமாக நமக்குத் தெரியவேண்டியவிஷயங்களைக் கற்றுவருகிறோம். இது நமக்கு ஒரு பெருங்குறை. இம்மாதிரிக்குறை ஜப்பானியர்களிடமிருந்தது. அவர்கள் அதைத் தீர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

நமதுதேசத்திலேயும் வங்காளவாசிகள் தங்கள் குறையையும் ஒருவாறு தீர்த்துக்கொண்டு, இன்னும் மேலேபோய்க்கொண்டிருக்கிறார்கள். தம் சொந்தப்பாஷைமூலமாகக் கல்விபயிலுவதின் விசேஷத்தையறிந்த

---

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தோராம்வருடக் கொண்டாட்டத்திற் படிக்கப்பட்டது.

நிஜாம்மன்னனும் தமது ராஜ்யத்தில் ஊஸ்மானியாயூனிவர்சிட்டியை நிர்மாணித்து, உருதுமூலமாகப் பாடங்கள் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் சமீபத்திலே, மைசூர்மன்னனும் தம் ராஜ்யத்தில் ஒரு யூனிவர்சிட்டியை ஏற்படுத்திக் கன்னடபாஷையை முதன்மையாக்க ஏற்பாடுசெய்திருக்கின்றனர். தெலுங்குநாட்டுச் சகோதரர்களுடைய ஊக்கமும் பாஷாபிமானமும் நன்று யின்னும் பலனடையவில்லை. மலையாளநண்பர்கள் என்னசெய்கின்றனரோ தெரியவில்லை. தமிழர்களாகிய நாம் அயர்ந்து கும்பகர்ணன்நித்திரையில் ஆழ்ந்திருக்கிறோம் நாம் துயிலெழுவேண்டும். துயில் தீர்க்கமாயெழுவேண்டும்!!

"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்.

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை
திறமானபுலமையெனில் வெளிநாட்டோர் அதைவணக்கஞ்செய்தல்வேண்டும்."

இப்படிச்செய்வதற்குத் தக்க ஒருசங்கம்வேண்டும். அது நமது தமிழ்ச்சங்கமேயாகும். அதற்கு இருபத்தோராவது ஆண்டும் முடிந்துவிட்டது. இன்னும் அது ஒரு மேஜருடைய குணாதிசயங்கள்பெறவில்லை. என்று பெறுமோ?? தமிழர்கள் "களிக்கின்றாராலால்" இது விஷயமாகக் "கவல்கின்றார் ஒருவரையுங் காணோமே!" நகரத்துச் செட்டிமார்களே! குறுநிலமன்னர்களே!! எழுந்திருங்கள், விழியுங்கள்!! எலக்ஷன்களிலும் கல்யாணகாலங்களிலும் செலவிடும் பணத்தை எண்ணிட்டுப்பார்த்தால் நமக்கு இதுவிஷயத்துக்கு வேண்டியபணம் கிடையாமற்போகாது. "கண்டெழுது பற்றுவரவினின்மயிர் பிளந்தே கணக்கிலணு வாகிலும்விடார்" ஆகிய "வணிகச்சீமான்களே! உசிதமான" இவ்விஷயத்திற் "கனதிரவியங்கள்விடுவார்"கள் என ஏற்படவேண்டும். வர்த்தகர்களுடைய உதவியின்றி, இவ்விதமானகாரியங்கள் ஈடேறா. நமது நாடுகளில், வர்த்தகர்களுடைய 'மகிமை' யின்பெருமையறியாதார் இல்லை. ஆதலின், தக்க செல்வவான்களே! செல்வாக்கு உள்ளவர்களே!! "வெள்ளத்தின்பெருக்கைப்போற் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவும்"வண்ணம் முன்வாருங்கள்! முன்வாருங்கள்!! முன்வாருங்கள்!!!

K. C. வீரராகவையர்.

ஸ்ரீ:

ஒரு விக்ஞாபநம்.

சென்ற ஆனிமாதச்செந்தமிழ்ப்பகுதியில் ஸ்ரீமான் சி. சிவசங்கர ஐயரவர்கள் தொடுத்த ஐயவினுக்களுக்குச் சென்ற ஆவணிப்பகுதியில் ஸ்ரீமான் K.G. சேஷையரவர்களும் எனது நண்பர் ஸ்ரீமான் T.N. அப்பனையங்காரவர்களும் விடுத்தவிடைகளைக் கண்ணுற்றேன். "மாதர்கள்கற் பின்மிக்கார்" என்னுங் கம்பராமாயணச் செய்யுளில், "மற்றைச் சாதகை மாந்தரெல்லாந் தயரதன்றன்னைபொத்தார்" என்னும் பகுதியின்பொருளை விளக்குமிடத்து ஸ்ரீமான் ஐயரவர்கள் "சாதுகை" என்ற பாடங் கொண்டு "சாது" என்னும் வடசொல்லே ககர அசைநிலைபெற்றுப் பின் னர்த் தமிழிற் "சாதுகை" எனத் திரிந்துவந்ததென்றும், நண்பரவர்கள் "சாதகைமாந்தர்" எனப் பாடங்கொண்டு சாவக்கடவ மூப்பான்முதிர்ந்து தளர்வெய்திவருந்தும் மாந்தரெல்லாரும் இராமனை முடிசூட்டிப்பார்க்கும் பாக்கியந் தமக்கில்லாமைக்கு மனமொழிமெய்களால் வருந்துகின்றுராத லின் அந்நிலைமையுடைய தயரதன்போலானுர்கள் என்றும் கூறியுள்ளார் கள். நிற்க,

இராமாபிஷேகவிஷயத்தில் நகரத்தார்க் கெழுந்தவுவகையைப் பொதுவகையாற் கூறியமையாது சிறப்புவகையானுங் கூறப்புகுந்த கம்பர் பெண்பாலரிற் கற்பின்மிக்கமுதுமகளிர் கோசலைமனத்தையொத் தார் என்றுகூறிப் பின் பருவமங்கையரனைவரையும் ஒழிவுபடாது வேறு மகளிரெல்லாஞ் சீதையையொத்தார் என்று கூறினர். ஆண்பாலாரைக் கூறக்கருதி வேதியர்வசிட்டனைத்தார் என்று வேதியரைமாத்திரம் பிரித் துக்கூறி ஒழிந்த ஆண்பாலரனைவரையும் ஒழிவுபடாது மற்றைமாந்த ரெல்லாந் தயரதன்றன்னைபொத்தார் என வாளாகூறுவதே அமைவதா யிருக்கவும் "சாதகை" என்னும் அடையைப்புணர்த்தியிருக்கிறுர்.

சான்றோர்செய்யுட்களில் அடைச்சொற் புணர்ப்பது தாங்குறித்த பொருள் சிறப்புந் தெளிவுமுறுதற்பொருட்டே யாதலின் இவ் வடைச் சொல்லால் 'மற்றைமாந்தரெல்லாந் தயரதன்றன்னைபொத்தார்' என்பத னுற் கம்பர்குறித்தபொருட்குத் தெளிவுஞ் சிறப்புங் கிடைத்தல்வேண் டும். அங்ஙனமிருக்க இவ்வடைச்சொற்குச் சாதுஜனங்கள் எனப்

பொருள்கொள்வதால் அங்ஙகரில் துஷ்டருஞ் சிலருளரோ என்றும் அவ ரென்னுற்றனரோ? என்றும், சங்கிக்க இடமேற்படுகின்றது. அன்றி நகர மாந்தரனைவரையுங் கூறியது மாகாது. அன்றிச் சாவக்கடவநிலைமையி லுள்ளமாந்தரெனிலோ வேதியரொழிந்தாரனைவரும் சாவக்கடவநிலைமையி லிருந்தாரெனப் பொருள்பட்டு அசம்பாவிதமாம். அந்நிலையிலிருந்த ஒரு சிலரெனக் கொள்வதாயினும் மற்றைப் பலரைவிடுத்து இச்சிலரைக் சொல்லிவிடுவதனாற் பலன்யாது? இராமாபிஷேகவிஷயத்தில் நகரத்தார்க் கெழுந்த மகிழ்ச்சிமிகுதியைவருணிக்கப்புகுந்த கம்பர் இவ்விடத்திற்குச் சிறிதும் இயைபில்லாத மாணுவஸ்தையிலிருந்தாரது துக்கமிகுதியை அநாவசியமாகப் பிரஸ்தாபித்துத் தயரதனது பரிதாபநிலையையுஞ் சூசிப்பித்து அமங்கலப்படுத்தத் துணிவரோ? அங்ஙனங்கூறவேண்டுவ தாயின், சாவக்கடவநிலையிலுள்ளாரும் இராமாபிஷேகங்காணும் உற்சாக பாவசராய்த் துள்ளியெழுந் தார்ப்பரித் தோடிக் கொலுமண்டபத்தை யடைந்தார்கள் எனக் கூறுவது தகாதோ? இங்ஙனம் இப்பொருள் களுக்கு இடர்ப்பாடுகள் காண்பதனாற் கம்பர் அச்சொற்கு வேறுபொருள் குறித்தவராதல்வேண்டும்.

ஊன்றிநோக்கினுல் உஜ்ஜயினீ என்னும் வடசொல் உஞ்சை என் றும், துவாரகாஎன்னும்வடசொல் துவரை யென்றும் தமிழிற் சான்றோர் செய்யுட்களில் வழங்கிவருதல்போல அயோத்தியின்பரியாயநாமமாகிய சாகேதபுரீ அல்லது சாகேதம் என்னும் வடசொல்லே இங்கே கல்வி யிற்பெரிய கம்பரால், தமிழ்யாப்புக்கிசையச் சாதகை யெனவழங்கப் பட்டதெனவே தோன்றுகிறது. சாகேதம் என்பது சாதகையென வழங்கப்படுவது தக்கதே. மிக அருகித்தோன்றும் இவ்வழக்கும் தமிழ் மொழிக் கின்றியமையாத தொன்றே. இங்ஙனம் தமிழணங்கிற்கும் தமிழ்ப்புலவ ருலகுக்கும் விருந்தளிக்கத்தக்காரெனக் கல்வியிற்பெரிய கம்பநாடரினும் வேறெவரைச் சொல்வது?

இங்ஙனங்கொள்வதாயின், சாதகைக்கண்வாழ்வாராகிய கற்பின்மிக்க முதுமகளிரெல்லாம் கோசலைமனத்தையொத்தார்; ஆண்டுவாழும் மற் றைப் பருவமங்கையரெல்லாம் சீதையையொத்தார்; சீதை திருவினை யொத்தாள்; சாதகை வேதியரனைவரும் வசிட்டனொத்தார்; ஆண்டுள்ள மற்றைமாந்தரெல்லாந் தயரதனைபோன்று மகிழ்ச்சிமிக்கு விளங்கினர்

கள் எனப்பொருள்படும். தயரதன் அப்பொழுது மகிழ்ச்சியிலனேயாயினும் இராமாபிஷேகவிஷயத்தில் தயரதனுக்குண்டாகும் மகிழ்ச்சியே போன்று அயோத்திநகரத்திலுள்ள மாந்தரனைவர்க்குந் தனித்தனி மகிழ்ச்சிமிக்கதென்பதே கருத்தாம். யாண்டுளமாந்தரெனிற் சாதகை மாந்தரெனத் தெளிவுபடுவதுடன் எஞ்சாமைப்பொருளும் வலியுறுகின்றது. இப்பொருள்கருதிக் கம்பர் இதனைவழங்கியிருக்கலாமோவென்று எனது சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. இதனைப்பற்றிக் கற்றகேட்ட பெரியோர்கள் தத்தங்கருத்துக்களை வெளியிடக்கடமைப்பட்டுள்ளார்கள்.

ரெ. இராமையங்கார்,
தமிழாசிரியன்.
கோபாலசமுத்திரம் ஹைஸ்கூல்.

பாமணி சிலாலிகிதம்.

கே. ஜி. சங்கரன்.

பாமணி என்பது தஞ்சாவூர்ஜில்லாவில் திருத்துரைப்பூண்டி ஜங்ஷனிலிருந்து 2 மைல் கிழக்கிலிருக்கும் ஒருக்ராமம். அவ்வூரில் முதலியார்கள் இருக்குமிடத்தருகில் காணப்படும் காளஹஸ்தீச்வரர்கோயில் தொண்டைமண்டலம் முதலியார்களால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது அது பாழடைந்திருக்கிறது. அதன் அமைப்பிலிருந்து அது 300 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதென்று தோன்றுகிறது. அதிலிருக்கும் லிகிதத்தை என் பார்வைக்குக்கொண்டுவந்து அதை வாசிப்பதற்கு உதவிய அவ்வூரில் பெரியமிராசுதாரரான கோ. ரெங்கநாதமுதலியார் அவர்களின் தந்தை கோபாலமுதலியார் அவர்களே கோயிலின் அடிவாரத்தை வடபகுதியில் சில இடங்களில் கல்லினால் திரும்பக்கட்டினவர். கோயில் செங்கல்லாற் கட்டப்பட்டது. கீழ்த்திசைநோக்கி யிருக்கிறது. அதில் அடக்கியிருப்பவை (1) லிங்கம், விமானத்துடன் கர்ப்பக்ருஹம்; (2) அர்த்தமண்டபம்; (3) வடபக்கம் நாகங்களை அடுத்து வீற்றிருக்கும் நடராஜருடனும், நடுவில் லிங்கத்துக்கு எதிரில் நந்தி பலிபீடங்களுடனும், வடகிழக்கில் தெற்குநோக்கி ஞானம்பாள் கோயிலுடனும் முகமண்டபம்; (4) தமிழ்லிகிதத்துடன்

படிக்கல்; (5) க்ரமமாய், தென்கிழக்கு, வடகிழக்கு மூலைகளிலும், விமாநத்திற்குப்பின்னும், வடபக்கத்தின் நடுவிலும், எல்லாம் லிங்கத்தைப்பார்த்திருக்கும் விஷ்ணு, விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், சண்டேச்வரர்கோயில்களுடன் ப்ராகாரம்; இக்கோயில்களின் விக்ரஹங்கள் தத்தமிடங்களில் இராமல் தக்ஷிணாமூர்த்தி பைரவ விக்ரஹங்களுடன் அங்கங்கு குவிக்கப்பட்டிருக்கின்றன; (6) ப்ராகாரத்திற்கு வெளியில் தென்பக்கத்தில் நந்தனவநமும் ஐயனார்குளமும்; (7) ப்ராகாரத்திற்கு வெளியில் வடகிழக்குமூலையில், அகத்தில் அங்குசத்தைக் கையிலேந்திய சாஸ்தாவிக்ரஹத்துடனும் அவர் தேவிகள் பூர்ணை புஷ்கலை விக்ரஹங்களுடனும், முன்னிலையில்நிற்கும் இரண்டு மண்குதிரைகளுடனும் ஐயனார் கோவில்.

அக்ஷயவர்ஷம் பங்குனி பௌர்ணமியில் இந்தலிகிதம் பொறிக்கப்பட்டது. கடைசி அக்ஷயவர்ஷம் கி. பி. 1866–67-ல் வந்தது. தாநங்கள் அளிக்க பௌர்ணமி சுபதிநமெனக் கருதப்படும். முன்காலத்தில் இந்த க்ராமம் பூராவும் காளஹஸ்தீச்வரரின் அபிஷேகக்கட்டளையாக ஏற்பட்டிருந்தது. இப்பொழுதோ அவருக்கு ஒன்றும் கிடையாது. அவர் நிலங்களை அநுபவித்துவருகிறவர்கள் அவர்கோயிலைச் சீர்திருத்துவதற்குக்கூடப் பணம் உதவமாட்டேன் என்கிறார்கள். இந்தக்ராமம் தெற்கு க்ராமம் என்று கூறப்படுவதால், தாநம் அளித்தவர், இதற்கு வடக்கில் இருந்ததாகத் தெரிகிறது. அவர் பெயர் இன்னும் வெளிவராதது வ்யஸனிக்கத் தக்கதே. இந்த க்ராமத்தின் பழம்பெயர் பாம்பணியே. அது இன்றும் இக்கோயிலிற் காணப்படும் நாகங்களையணிந்த சிவன் பெயர் ஆகும். கோயில் கட்டிமுடிந்ததும் இந்தலிகிதமும் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. அது இதுவரை வெளிவராததால், கீழே தரப்படுகிறது.

(1) [அக்ஷயவர்]ஷ[ம்]ப (2) ங்கு[னிமாஸத்து] (3) சாந்த்ரமத்ய (4) தனம்மந்தசீதம் (5) [பானம்]திபராக் (6) [கஅபி]ஷேககட் (7) [ட]ளைக்குத் [தெக்கு] (8) [க்]கிறாமமான (9) பாண்பணிநா (10) [ன்கெ]ல்லைக்கு (11) ம்உட்பட்டதெ (12) ல்லாம் சந்திரா[தித்த] வரையும் (14) அனுபவித்துக் (15) கொள்ளவும்.

புத்தக மதிப்புரை.

1. சளுக்கியவிக்கிரமாதித்தன்சரித்திரம்:—இது சென்னை மேரி ராணியார் மாதர்கலாசாலைச் சரித்திரபோதகாசிரியராகிய ஸ்ரீமத். அ வா. வேங்கடராம ஐயர் M.A., L.T. அவர்களால் எழுதப்பெற்றது. இதில் இதுகாறும் சிலாசாசனங்களால் வெளிவந்த விஷயங்களைக்கொண்டு ஆராய்ந்தறிந்து சளுக்கியவிக்கிரமாதித்தனுக்குப் பூர்வபரம்பரைகளும் அவனுடைய விருத்தாந்தங்களும் எழுதப்பட்டுள்ளன. இதன்விலை ரூபா 1. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

2 ஆங்கிலகலாசாலை மாணவர்களின் 1923வருஷத்து S.S L.C. பரீக்ஷையின் A பிரிவுக்குரிய செய்யுட்பாடக்குறிப்புரை:–இது ஸ்ரீமத். பண்டித. ரா. திம்மப்ப ஐயரவர்களால்,செய்யுட்களுக்கு உரையும் இலக்கணக்குறிப்புக்களும் ஆங்காங்கு மாணவர்களறிந்துகொள்ளவேண்டிய வாலாறுகளும் நன்குவிளங்குமாறெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. தமிழ்வியாசம்(விஷயமும் குறிப்பும்):–இது சென்னை சென்ற் பீட்ரஸ் ஐஸ்கூலின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சே. சோமசுந்தரம்பிள்ளையவர்களா லெழுதப்பட்டது. இதனால் இடைத்தரமாணவர்களுக்குத் தமிழ்பயிற்றுவிக்கும் முறை யறியலாம். இதன்விலை அணா 5. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

4. நாயன்மார்:—இது, நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமத். திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்களால் நாயன்மார்களி னழகலாருன செயல்களின் உண்மைக்கருத்துக்களை யாவரும் படித்துணரும்படி தெளிவாயெழுதப்பட்டுக் காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் வெளியிடப்பட்டது. வேண்டுவோர் அத்திருக்கூட்டத்தாருக் கெழுதிப் பெறலாம்.

5. நாப்பழக்கத்திற்கான நற்கதைகள்:—இது சென்னை சென்ற் பீட்ரஸ் ஐஸ்கூலின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சே. சோமசுந்தரம்பிள்ளையவர்களால் சிறுவர்கள் படிப்பதற்கேற்றவாறு 11 சிறுகதைகளுடையதாய் நன்று யெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 2½. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

6: கவிமணிமாலை முதற்பாகம் அரும்பதவுரைக்குறிப்புடன்:— இதில், பெருந்தேவனார்பாரதத்தில் உத்தியோகபர்வத்தில் 150 செய்யுளும், நாச்சியார்கனவு, அம்பரீஷன், தசரதன்சாபம், இளையான்குடிமாற நாயனார், திருவாசகம், நன்னூல், இறைமாட்சி என்னும் தலைப்புடைய சில செய்யுளும் அடங்கியன. இதன்விலை அணா 7. வேண்டுவோர் ஐயம் அண்டு கம்பெனி 35 ஹைரோட், எழும்பூர், சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

7. பாண்டவர்தூதன்:—இது பாரதத்து உத்தியோகபர்வகதையைத் தமிழ்நடையிலெழுதி ஷை கம்பெனிபால் வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 6.

8. திணைமொழி ஐம்பது (மூலமும் பழையவுரையும்):— இது சென்னை பச்சையப்பன்காலேஜின் தமிழாசிரியர் ஸ்ரீமத். மணிநாவுக்கரசுமுதலியாரவர்களாற் பரிசோதிக்கப்பட்டுத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 5. வேண்டுவோர் மேற்படிக் கழகத்தார்க்கெழுதிப் பெறலாம்.

9. இனியவைநாற்பது (மூலமும் பழைய பொழிப்புரையும்):- இது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமத். வ. மகாதேவமுதலியாரவர்களெழுதிய விருத்தியுரையுடன் ஷை கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 5.

10. அ. குமாரசுவாமிப்புலவரின் சரித்திரச்சுருக்கம்:— இது உடுவில் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமத்: வ.மு. இரத்தினேசுவரையரவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 2. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.